உ

ஸ்ரீ வள்ளி கல்யாணம்

(பஜனோத்ஸவ பத்ததி)



ஆசிரியர் :

டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி

"குருதாஸன்"

வெளியிட்டோர் :

ஏ. கே. கோபாலன் பப்ளிஷர்

5, சேதுப்பிள்ளைத் தெரு,

போஸ்டல் ஆடிட் காலனி

சாலிக்கிராமம், சென்னை-93

1989

விலை ரூபாய் 5-00

ஸ்ரீ வள்ளி கல்யாணம்

(பஜனோத்ஸவ பத்ததி)



ஆசிரியர் :

டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி

"குருதாஸன்"

வெளியிட்டோர் :

ஏ. கே. கோபாலன் பப்ளிஷர்

5, சேதுப் பிள்ளைத் தெரு,

போஸ்டல் ஆடிட் காலனி

சாலிக்கிராமம், சென்னை-93

பதிப்புரை

ஸ்ரீ ஹரிபஜனையில் ஈடுபட்ட (ஸ்மார்த்த பிராம்மணனும் சிவமத ஸம்பிரதாயத்தில் ஊறியவனுமாகிய என்னை) கௌமாரப் பிரிவினரின் சகல பெருமைகளையும் காட்டி திருப்புகழ் முதல் முருகன் மதுர கீர்த்தனங்கள் வரை இடையறாது பாட வைத்து என்னை யாண்டு கொண்ட ஸ்ரீ முருகன்—முத்துக் குமரனுக்கு என் உடல் பொருள் ஆவியை சமர்ப்பணம் செய்கிறேன்.

சென்னை மண்ணடி மல்லீஸ்வரர் கோயில் சந்நிதியில் கருத்துக்குப் பின் கருத்து துரத்த மெய் சோர, கண்களில் நீர்மல்க தமிழ்க் கடவுளை நேரில் பாடியதை கண்டு களிக்கும் பாக்கியம் கிடைத்தது. ஸ்ரீ அருணகிரி நாதரை, அவர் பாடியதை நான் கண்டதில்லை. அவர் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் ஸ்ரீ ஸாதுராம் அவர்களைப் போலத்தான் இருந்திருப்பார் என்று எண்ணத் தோன்றியது. ஸாதுக்களின் தர்சன பாக்யத்தால்தானோ என்னவோ இன்று அவர்கள்திருவாய் மூலமே (பாராட்டப்படும்) ஆசீர்வதிகப்படும் பாக்யம் பெற்றேன். இதுவும் ஸ்ரீ திருமுருகனின் க்ருபைதான். ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு என் அனந்த கோடி நமஸ்காரங்கள்.

சென்ற பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக இரண்டு மாணவர்களாக ஒரே குருவின் கீழ் ஸம்ப்ரதாய ஹரி பஜனையை - சிவ பஜனையை பாடிவந்த எங்களுக்கு தமிழ்க் கடவுளான முருகனையும் தமிழ்மாலை சூட்டிய ஆண்டாளையும் திருமணக் கோலத்தில் தமிழ் நாட்டில் தமிழ்மறை மொழிகளில் பாடிப் பணிய ஆவல்தான்.

இதைக்கற்பனைவளமுள்ள தற்காலக் கவிஞர்கள் வரிசையில் வந்த ஒருவரால்தான் ஆக்கித் தர முடியும் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே எங்களிடையே ஒரு கவிமணி—ஏகசந்தக்ராஹ்யர் இருப்பதை இப்பொழுதே கண்டேன் ஸ்ரீ ஆண்டாள் கல்யாணம், ஸ்ரீவள்ளி கல்யாணம் இரண்டையும் தமது கற்பனை வளத்தாலும் முன்னோர்களின் பாடல் தொகுப்பினாலும் ஆக்கித் தந்த கலைஞரும் என் ஸஹபாடியுமான ஸ்ரீ T. S. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் என் உள்ளம் கனிந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இதைப் புத்தகமாக வெளியிடும் உரிமையையும் பிடிவாதமாக அளித்த நண்பருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஏ. கே. கோபாலன்
பப்ளிஷர்.

முகவுரை

நமஸ்காரம்!

இறைவனின் திருநாம முழக்கமே கலியினில் இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயக்க வல்லது என்பது நமது பாரத மண்ணுள் வேரூன்றித் தழைத்துள்ள உண்மை. பெரியோர்கள் வகுத்துவைத்த பஜனை ஸம்ப்ரதாய முறைகளை ஒட்டி பஜனைகள் நடைபெறுகின்றன. தவிர ஸீதா கல்யாணம், ராதா கல்யாணம், மீனாட்சி கல்யாணம், ஆண்டாள் கல்யாணம் எனத் தெய்வீகத் திருமண வைபவங்களும் பஜனோத்ஸவ முறைப்படி ஆங்காங்கே கொண்டாடப்பட்டு வருகின்றன. அதே முறையில் மஹாஸ்கந்த ஷஷ்டியை ஒட்டி, விசாகப் பெருமானது சூர ஸம்ஹாரமும், வள்ளி கல்யாண உத்ஸவமும் நடத்தப்பட்டு வருகின்றன.

சாதாரணமாக வள்ளி கல்யாணத்துக்கென்று அனுசரிக்கப்பட்டு வரும் முறையில் பாடல்கள் பெரும்பாலும் வட மொழியிலும், தெலுங்கிலுமே உள்ளன. பாடல்கள் தமிழில் அமைந்திருந்தால் மேலும் பல அடியார்கள் பொருளுணர்ந்து அநுபவித்துப் பாடி மகிழ முடியுமே என்ற எண்ணம் தோன்றியது. உடனே அருணகிரியார் அழகு தமிழில் திருப்புகழ்ப் பாடல்களில் முருகனின் புகழை வள்ளி மணாளனை அவனைப் பல பாடல்களில் மகிழ்ந்து பாடியுள்ள சிறப்புதான் முதலில் நினைவுக்கு வந்தது. அப்பாடல்களில் உள்ள அழகிய சொற்றொடர்கள், பொருட்சுவை, பல்வேறு இனிய சந்தங்கள் எல்லாம் முன்வந்து நின்றன. அதன் விளைவாகப் பல திருப்புகழ்ப் பாடல்களிலிருந்து ஏற்ற அடிகள், அநுபூதி, அலங்காரம், பிள்ளைத் தமிழ், சஷ்டி கவசம் முதலிய பல பகுதிகளைத் தக்கவாறு இணைத்துத் தொகுத்து இந்தச் சிறிய நூல் உருவாகியது. குருமலை சிவகுருநாதனின் கருணையும், நடமாடும் தெய்வங்களான நமது குருநாதர்களின் எல்லையற்ற அருளும் துணை நிற்க இந்த திருக்கல்யாணப் பத்ததி வகுக்கப்பட்டது.

தவிர ஸம்ப்ரதாய முறையைப் பின்பற்றவும், திருக்கல்யாண நிகழ்ச்சியில் தொடர்ச்சி சரியாக அமையவும் சிற்சில இடங்களில் அறுமுகவனருளால் அடியேனால் இயற்றப்பட்ட பாடல்களும், அடிகளும் இணைக்கப்பட்டுள்ளன.

ஹரி பஜனை ஸம்ப்ரதாய முறையில் பரிச்சயமுள்ள எவரும் எளிதில் பாடக்கூடிய வகையில், தோடயமங்களம்

குரு வணக்கங்கள், முத்துக் குத்துதல், லக்ஞஷ்டகம், கல்யாண நலங்கு, டோலோத்ஸவம் என்று அதே வரிசையில் அதே பிராசீன ஸம்ப்ரதாயப் பாடல்களின் மெட்டுகளில் அதே தாளங்களில் பாடல்கள் அமைக்கப் பட்டுள்ளன.

முருகனடியார்கள் இந்த நூலை அன்புடன் ஏற்றுப் பயன் படுத்தி அவனருளைப் பெற வேண்டுமென்பது அடியேனின் வேண்டுகோள். மலைத்தேனிலும், தினைமாவிலுமே திருப்தி அடைந்தவன் முருகப் பெருமான்! அவனது அடியார்கள் இந்த நூலில் உள்ள குற்றம் குறைகளைப் பொறுத்து, வள்ளி—கந்தன் திருமண வைபவத்தைப் பாடும் பக்தி நூல் என்ற முறையில் இதனை அங்கீகரித்து, வள்ளி திருக்கல்யாண வைபவத்தை பஜனோத்ஸவ முறையில் கொண்டாடி இன்புறவேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

திருப்புகழ் அமுதை வெள்ளமெனப் பெருக்கிப் பரவச் செய்த ஸ்ரீவள்ளிமலை ஸத்குருஸச்சிதானந்த ஸ்வாமிகளின் பிரிய சீடர், ஸ்ரீ வைணவிதாஸர், அருட்கவி ஸ்ரீ ஸாதுராம் ஸ்வாமியவர்களின் திருமுன்னர் இந்த நூல் முதலில் பாடப்பட்டு அவரது ஆசியைப் பெற்றது நூல் செய்த புண்ணியம். தொகுப்பாசிரியன் செய்த பெரும் புண்ணியம் ஆங்காங்கே தேவையான சிறு மாற்றங்களையும் பிழை திருத்தங்களையும் செய்ய உதவி அருளினார்கள். தவத்திரு, ஸ்வாமியவர்கள். இன்று இந்த நூல் அச்சிட்டு வெளிவரும் போது நல்லாசி வழங்கிச்சாற்றுக்கவி அளித்தும்அருளினார்கள். அவர்களது சரண கமலங்களில் என் அனந்த கோடி நமஸ்காரங்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

இந்தச் சிறிய நூலைப் பெருமனங் கொண்டு, பொறுப்புடனும், சிரத்தையுடனும் அழகாக வெளியிட்டுள்ள என் இனிய நண்பர் ஸ்ரீ அ. கி. கோபாலன் அவர்களுக்கு என் இதய பூர்வமான நன்றி, நமஸ்காரங்கள்.

எனது முதல் நூலான "ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாண"ப் புத்தகத்தைத் தொடர்ந்து இன்று இந்த "வெமர அணையிலினிது துயிலும் விழிகள் நளினன் மருகோனி"ன் திருக்கல்யாண வைபவ நூலை அடியார்களின் திருமுன்னர் அலைவாயுகந்த பெருமாளின் மலரடிகளில் சமர்ப்பிக்கின்றேன்.

நாமஸங்கீர்த்தனப் பணியில் என்னை ஈடுபடுத்தி எனது இரு கண்களாக நின்று எனக்குத் துணை நின்று ஊக்குவித்து வரும் எனதிரு குருநாதர்களான ஸ்ரீ டி. வி. நாராயண சாஸ்திரிகளுக்கும், ஸ்ரீ ஸி ஹெச். கிருஷ்ணய்யரவர்களுக்கும் இந்த நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

அன்பன்

டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி
("குருதாஸன்")

உ

ஸ்ரீ வைஷ்ணவி ஸ்மரணம்

அருட்கவி தவத்திரு ஸாதுராம் ஸ்வாமிகள் அருளிய சாற்றுக் கவி

(எழுசீரடி ஆசிரிய விருத்தம்)

1

மருட்டெறும் "அகில பாரத பாக
வதஸம்மேளனத்தில்" ஆண்டோரா
யிரத்துத்தொள்ளாயிரத் தெழுபத் தொன்
றினில் 'குருதாஸன்' என் விருதும்
அருட்டரும் 'பாகவதரத்ந' விருதும்
அளித்திடப் பெற்ற அந்தணனார்
கிருட்டிண மூர்த்திப் பெயரினர், கல்வி
கேள்விகளிற் சிறந்துய்ந்தோர்.

2

பன்னிரண்டாழ்வார் பகர்ந்தருள் நாலா
யிரதிவ்யப்ர்பந்தப் பாசுரங்கள்
பின்னிய "ஆண்டாள் திருக்கலியாணப்"
பிரபந்த நூல் வெளியிட்டோர்,
இன்னிசைப் பாக்கள் ஏராளமாக
இயற்றியுள்ளார், ஸம்ப்ரதாயம்
துன்னியே ஸீதைராதை கல்யாணம்
சொல்புகழ்க் கோதை கல்யாணம்

3

வள்ளிகல்யாணம் ஆகிய பாட்டால்
மன்னுகை மெய்வழிபாட்டால்
உள்ளியல் அன்பால் பஜனைகள்பாடி
உளுற்றுநர் ஜீயபுரத்தார்
பிள்ளையந் தமிழ் திருவகுப்படிகள்
பேசநுபூதி மற்றருணை
வள்ளல்சொற்ற திருப்புகழ் அலங்காரம்
வளாய பா "வள்ளிகல்யாணம்"

4

உற்சவ பஜனைப்பத்ததி நூலா
உகந்தளித் துள்ளனர் இந்நாள்
ஸற்சநர்யாரும் இன்னிசை பாடித்
தண்டமிழ் முருகனை வள்ளிக்(கு)

6

அர்ச்சனை செய்த ஆண்டவனுக
அநுபவித்திட வழிவகுத்தார்
நற்சபைகளினுல் திருப்புகழ் பரப்பும்
நாட்டவர் யாவரும் நயப்ப

5

அத்தகு மறையோர் அரசலு வலகத்
தாங்கிலம் சொலிப் பொருள் தேடும்
உத்தியோகத்தார், ராக தாளங்கள்
உணர்ந்து பாடும் பெரு வரத்தார்,
பத்தியோகத்தும் பயில்பவர், பாக்கள்
பாடிட வல ஒரு கவிஞர்
புத்தகம் அச்சிட் டொப்பச்சுத் திருத்திப்
புதுப் புது நூல் வெளியிடுவார்

6

இன்னவர் யாத்த "வள்ளி கல்யாண"
இன்னிய நற்றமிழ் நூலை
அன்னவர் நண்பர் ஏ. கே. கோபால
ஐயர் தாம் வெளியிட முன்வந்
தென்னவன் வள்ளிக் கேற்றவன் கருணைக்
கேற்ற தோர் பாத்திர மானுர்
முன்னவன் கணேசன் பின்னவன் முருகன்
முத்தமிழ் வித்தகன் அருளால்

7

யாத்தவர் அச்சுக் கோர்த்தவர் ஒப்புப்
பார்த்தவர், இதைவெளி யிடுமா
மாத்தகு பொருளை ஈத்தவர் வகுத்து
வள்ளிதன் மணாளனை வாழ்த்தும்
பாத்தவர் பஜனைப் பத்ததி யாலே
பண்ணு நர் "வள்ளிகல்யாணம்"
மூத்தவர் இளையோர் ஆடவர் பெண்டிர்
முற்றிலும் ஏவரும் உய்வர்!

8

வள்ளி மாமாலைவாழ் திருப்புகழ் ஸச்சி
தாநந்த வள்ளல் எம் ஆசான்
எள்ளிலா "ஞாந ஸச்சிதா நந்த
வல்லி" இன் சரிதம் என்றியம்பி

“வள்ளி கல்யாணம்” திருப்புகழ் முறையில்
வாய் மலர்ந் தெங்கணும் பரப்பி
உள்ளனர் விளக்க உரைசொல் ஸங்கீத
உபந்யாஸமா ப்பல இடத்தே!

9

அவரைப் போல் இவரும் அவர்குரு வருளால்
ஆண்டவன் குஹன் திருவருளால்
நவரஸம் பொலியத் தொடைநயம் தாள
நடைநயம் மொழிநயம் நலக்க
எவர் எவர்பயில்வார் அவர் அவர் இதயம்
இதழ் மலர் செய்யவாய் மணப்ப
நுவலும் இந்நூலைப் பக்தர்கள் உலகும்
நுண்தமிழ் உலகும் நன்குவக்கும்.

10

சென்னையில் மால்வாழ் திருவல்லிக்கேணித்
திருத்தலம் திகழச் செய் பஜனை
பன்னிரு “பாண்டுரங்க மண்டலி”யின்
பழம்துணைத் தலைவராப் பணியில்
இன்னவர் க்ருஷ்ணமூர்த்தி ஐயருக்கே
இறைவி எம் வைஷ்ணவி என்றும்
பன்னலங்களும் பல்லாண்டு நல்வாழ்வும்
பாலிக்க வேண்டுவன் பணிந்தே.

—(அருட்கவி) ஸாதுராம் ஸ்வாமிகள்

★

ஸ்ரீ வள்ளி திருக்கல்யாணம்

(பஜனோத்ஸவ பத்ததி)

[திருப்புகழ், அநுபூதி, அலங்காரம் முதலியவைகள்
கொண்டு தொகுக்கப்பட்டது]

நாமகோஷம்

வெற்றி வேல்முருகனுக்கு அரோஹரா!
ஜெய் ஸத்குரு அருணகிரிநாத ஸ்வாமிகளுக்கு—ஜெய்.

நாமாவளி

முருகா ஶரணம் முருகா ஶரணம்
முருகா ஶரணம் முருகா ஶரணம்

தியானங்கள்

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து ருகத்
தஞ்சத் தருள் சண்முகனுக்கியல் சேர்
செஞ் சொற்புனே மாலை சிறந்திடவே
பஞ்சக்கர வானேப் பதம் பணிவாம் !

மூவிருமுகங்கள் போற்றி! முகம் பொழி கருணை போற்றி!
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி! காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள மலரடி போற்றி யன்னுன்
சேவலு மயிலும் போற்றி!திருக்கை வேல்போற்றி!போற்றி

விழிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள்: மெய்ம்மை குன்ரு
மொழிக்குத்துணை முருகா எனும்நாமங்கள் முன்பு; செய்த
பழிக்குத்துணையவன் பன்னிருதோளும், பயந்ததனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே!

தருப்புகழ்வல்ல சுரர்மகள் நாயகன் சங்கரற்கு
குருப்புகழ்வல்ல குமரேசன் ஷண்முகன் குன்றெறிந்தோன்
மருப்புகழ்வல்ல அருணகிரி பெயர் வள்ளல் சொன்ன
திருப்புகழ்வல்லவர் சீர்பாதத்துளியென் சென்னியதே !

கருமான் மருகனை, செம்மான் மகளைக் களவு கொண்டு
வருமா குலவனைச் சேவல்கைக்கோளனை, வானம் உய்யப்
பொருமாவினைச் செற்ற போர்வேலனைக் கன்னிப்பூகமுடன்
தருமா மருவு செங்கோடனை வாழ்த்துகை சாலநன்றே!

உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரை யான்பின் செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தில் வாழ்வே!

தேனினும் இனிய உன்றன் திருப்புகழ் ஓதி வாழும்
ஞானியர் உறவுபெற்றே நாளுமுன் நாமம் சொல்லி
நானெனும் அகந்தைநீக்கி நற்றவ வாழ்க்கை வாழ,
நானிலம் போற்றும் பழனிநாதனே! அருள் செய்வாயே!

சென்னி ஆறும் தணிந்த சிவபரஞ்சுடர்க்கு வேதம்
சொன்ன ஆசிரியனென்று தொல்லுலகனைத்தும் போற்றப்
பொன்னிகும் ஏரகத்துப்பொருப்பினிற் கோவில்கொண்ட
பன்னிரு கையன் வேலைப் பணிவதே எமக்கு வேலை!

கொன்றைசேர் சடைகளாடக் கொடியிடை உமையாள்
காண
மன்றிலே ஆடல்கொண்ட மகதேவன் வியந்து வாழ்த்தக்
குன்றுதோருடல் காட்டும் குமரவேள் மலர்க்கரத்து
வென்றிசேர் சக்திவேலே வேண்டுவதெமக்கு வேலே!

புவனமோர் மூன்றும் வாழப் புராரிதன் நுதற்கண்
நோக்கில்
அவிசுடர் ஒளியாய்த் தோன்றிஅறுமுகத் தேவாய்,அன்பர்
பவபய மொழித்துக்காக்கப் பழமுதிர் சோலை மேவும்
சிவசுப்ரமணியன் வேலைச் சேவிப்பதெமக்கு வேலை!

வீரவேல் தாரைவேல் விண்ணேர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை!

த்டக்கொற்ற வேள்மயிலே! இடர்தீரத் தனிவிடில் நீ
வடக்கில் கிரிக்கப்புறத்து நின்ரேகையின் வட்டமிட்டு
கடற்கு அப்புறத்தும், கதிர்க்கு அப்புறத்தும் கனகசக்ரத்
திடற்கு அப்புறத்தும் திசைக்கு அப்புறத்தும் திரிகுவையே!

படைபட்ட வேலவன்பால் வந்த வாகைப்பதாகை
யென்னும்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதி கிழிந்து
உடைபட்டது அண்டகடாசம் உதிர்ந்தது உடுபடலம்
இடைப்பட்ட குன்றமும் மாமேருவெற்பும் இடிபட்டவே!

அடிமைசெய் குற்றமெலாம் அருளுடன் பொறுத்தல்
வேண்டும்
படிமிசை என்னை உண்மைப் பத்தனுய்ச் செய்தல்வேண்டும்
மிடியினை நீக்க என்முன் விரைவினில் வருதல் வேண்டும்
அடியரின் பாரந்தாங்கும் அப்பனே! குமரவேளே!

வெற்றி வேல் முருகனுக்கு அரோஹரா!

★

தோடய மங்களம்

அம்பிகை பாலகனே ஆனைமுகன் சோதரனே
ஆறுபடை வீடுகொண்ட அண்ணலே முருகா—ஜெயஜெய
பரங்கிரியில் குஞ்சரியின் பதியான சிவைபாலா
பரமபதமாய செந்திற் பதிவாழ்வேமுருகா—ஜெயஜெய

பலவயலிற் றரளநிறைப் பழநிமலைப் பெருமாளே
பரவுகுருமலை வாழும் பரமேசன்குருவே—ஜெயஜெய
படிமீதுன்புகழ்பாடிப் பலரேத்தும் தணிகேசா
பழமுதிர் சோலையமர் பெருமாளே முருகா—ஜெயஜெய
வாராய் மனக்கவலை தீராய் நினைத்தொழுது
வாரேனெனக்குமெதிர் வரவேணும் முருகா —ஜெயஜெய
வள்ளிக்குழாமடர்ந்த வள்ளிக்கல்மீது சென்று
வள்ளிக்கு வேடைகொண்ட பெருமாளேமுருகா—
ஜெயஜெய

★

குமர குருபர முருக சரணம்
குறவர்சிறுமி மணாளனே
சமரநீலி புராரி நாயகி
சங்கரி மகிழ்குமாரனே—முருகவேளே

முருக பார்வதி புதல்வ கார்த்திகை
முலைகள் தேக்கிட உண்டவா
அரியும் அயனுடைபய மெனவே
அயிலை இருள்மேல் விட்டவா—முருகவேளே

அருணை பரங்கிரி பழநி உகந்தருள்
அழகனே வள்ளி நாயகா
கருணைபொழிந்து முகமுமலர்ந்து
கடுகி நடங்கொளருள்வாய்—முருகவேளே

ஞான நெஞ்சினர் பாலிணங்கிடு
கூர்மை தந்தினி ஆளவா
ஆனனங்கள் மூவிரண்டுடன்
ஆறிரண்டு தோளனே—முருகவேளே

மாதினைப் புன மீதிருக்கு மை
வாள் விழிக்குறமாதினைத்திரு
மார்பணைத்த மயூர அற்புத
தணிகை மாமலை வாசனே—முருகவேளே!

★

முருகாசரணம் குமரா சரணம்
முத்தர்கள் போற்றிடு முதல்வா சரணம்
வல்லசுரர்மாள நல்லசுரர்வாழ
வல்ல வடிவேலைத் தொடுவோனே
வெள்ளை இபமேறு வள்ளல் கிளைவாழ
வெள்ளமுதுமாவைப் பொருதோனே—(முருகா)

பெருமலை புருவிட அடியவர் உருகிட
பிணிகெட அருள்தரு குமரேசா
திருமகள் மருவிய திரள்புய அறுமுக
தெரிசனை பெற அருள் புரிவாயே —(முருகா)

நாவலர் பாடிய நூலிசையால்வரு
நாரதனார் புகல் குறமாதை
நாடியெ கானிடை கூடிய சேவக
நாயக மாமயிலுடையோனே— (முருகா)

கனக சபை மேவும் எனது குருநாத
கருணை முருகேசப் பெருமாளே
இனிது வனமேவும் அமிர்த குறமாதொ
டியல் பரவு காதற் கந்தவேளே - (முருகா)

துள்ளி விளையாடு புள்ளியுழைநாண
எள்ளி வனமீதுற்றுறைவோனே
வள்ளி படர்சாரல் வள்ளிமலைமேவு
வள்ளி மணவாளப் பெருமாளே— (முருகா)

★

தேவர்யாவருந்திரண்டு பாரின்மீதுவந்திறைஞ்சு
தேவனூர் விளங்கவந்த தேவா எழுந்தருளாய்
வள்ளிக்கணவா எழுந்தருளாய்

அதிசயம் அநேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகா திருவேரகத்தின் குருவே எழுந்தருளாய்
வள்ளிக்கணவா எழுந்தருளாய்

பகையசுரர் சேனைகொன்று அமரர் சிறை மீளவென்று
பழனிமலை மீதில் நின்ற முருகா எழுந்தருளாய்
வள்ளிக் கணவா எழுந்தருளாய்

பதிகள்பலவாயிரங்கள் மலைகள்வெகுகோடிநின்ற
பதமடியார் காணவந்த கதிர் காமா எழுந்தருளாய்
வள்ளிக்கணவா எழுந்தருளாய்

பீலிமயில் மீதுறைந்து சூரர்தமையே செயங்கொள்
பேர்பெரியவேல் கொள்செங்கை முருகோனே
எழுந்தருளாய்
வள்ளிக்கணவா எழுந்தருளாய்

வானவருக்கரசானே வாசவனுக்கினியானே
ஆனைமுகற் கிளையோனே குமரா எழுந்தருளாய்
வள்ளிக்கணவா எழுந்தருளாய்

அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் பெருமாளே
குறமாதைப் புணர்வோனே குகனே எழுந்தருளாய்
வள்ளிக்கணவா எழுந்தருளாய்

★

மா மயில் வாகனனே மங்களம்
மங்கைவள்ளி நாயகனே மங்களம்—மரகத (மா)
அயனையும் புடைத்துச்சினந்து உலகமும் படைத்துப்
பரிந்து
அருள் பரங்கிரிக்குட் சிறந்தாய் மங்களம் - மரகத (மா)
ஆரணங்கள் தானைநாட வாரணங்கை மேவும்ஆதி
யானசெந்தில் வாழ்வதானாய் மங்களம் —மரகத (மா)
காமன்கை மலர்கள்நாண வேடப் பெண்மலி சேர்வை
காணெங்கள் பழநிவேல மங்களம்—மரகத (மா)
தோரண நன்மாடமெங்கு நீடுகொடியே தழைந்த
ஸ்வாமிமலை வாழவந்தாய் மங்களம்—மரகத (மா)
மயிலோடு மான்கள்சூழ வளவரி வேங்கையாகி
மலைமிசை தோன்றுமாய வடிவேலனே—மரகத (மா)
அருவறையை நீரெழுப்பி நிருதர்தமை வேரறுத்து
அமரர்பதி வாழவைத்தாய் மங்களம்—மரகத (மா)
வனசரர் மரபினில் வருமொரு மரகத
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே மங்களம் - மரகத (மா)

சிதள வாரிஜ பாதாமுருகா நாரதகீத விநோதாகுமரா
பாதக நிவு குடாரா முருகா பாரினிலே ஜெயவீராகுமரா
ஆகம சாரசொரூபா முருகா தேவர்கள்சேனைமகிபாகுமரா
பார்வதியாள் தருபாலாமுருகா பாலகுமாரஸ்வாமீகுமரா

சரவணஜாதா கருணையதீதா
சததளபாதா ஷடாக்ஷரா
பரமசொரூபா சுரர்பதிபூபா
பரிமளநீபா க்ருபாதரா

நாமாவளி

வள்ளி நாயக வேல்முருகா—சிவ
சங்கரி தனயா மால்மருகா!

★

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

(விருத்தம்)

ஆலமரத்தடியில் அதிசயமாம் காட்சி கண்டோம்!
சீலமிகு தவப்பெரியோர் சிரத்தையுடன் அமர்ந்திருக்க
சூலம் வைத்தோனொரு சின்னஞ்சிறு பாலகனைப்
போலமர்ந்து மௌனத்தால் பொழிகின்றான் உபதேசம்

ராகம்: கல்யாணி பல்லவி தாளம்: ஆதி

ஆலின் கீழமர்ந்து அருளொளி வீசிடும்
அருட் சோதியாம் தெய்வமே (ஆலின்)

அநுபல்லவி

நாலின் பொருளனைத்தும் நயமொடு மௌனமாய்
நால்வர்க்குரைத்த குருநாதனே சங்கரனே (ஆலின்)

சரணம்

தென்திசை நோக்கியே நீயும் அமர்ந்து கொண்டாய்
தட்சிணாமூர்த்தியென நாமமும் பூண்டாய்
உன் திருவடி மலரில் உலவிடுவேன் வண்டாய்
உள்ளத்திருள் நீக்குதல் உன் கடன் கண்டாய் (ஆலின்)
ஸனகாதியோகியர் பணிந்திடும் பொற்பாதா
ஸத்குரு பரம்பரையின் ஆதிகுருநாதா
தினகரனென ஞானக் கதிர்வீசு தத்வபோதா
திருவடி பணியும் குரு தாசனுக்கருள் தாதா (ஆலின்)

நாமாவளி

ஆலின் நிழலில் அமர்ந்தவனும்
ஆதிகுருநாதன் அடி பணிவோம்
ஆலின் கீழமர் சிவபெருமான் நம்
அக இருள் நீங்கிட அருள் புரிவான்.

அகத்தியர்

ராகம்: கமாஸ் பல்லவி தாளம்: ஆதி

தமிழ்முனி எனப்பெயர் தரித்த அகத்தியனும்
தவப்பெரியோனைத் துதிப்போம் (தமிழ்)

அநுபல்லவி

அமிழ்தினும் இனிதான அருந்தமிழுக்கிலக்கணம்
அழகுறத்தான் வகுத்து அவனிக்களித்த அந்த (தமிழ்)

சரணம்

அகத்தியம் முதலான அற்புத நூல்கள் தந்தவன்
அங்கையினுல் எழுகடல் அள்ளிக்குடித்தவன்
அகத்துளெள்ளேரமும் அறுமுகனை வைத்தவன்
அன்புடன் குருதாசனை ஆட்கொண்ட கும்பமுனி (தமிழ்)

நாமாமளி

அகத்தியனும் செந்தமிழ் முனியே
அடியார்க்கருள் புரிவாய் நீயே

அருணகிரி நாதர்

விருத்தம்)

மனத்தினை உருக்கி, கேட்கும் மக்களின் விழிமுனை
யெல்லாம்
பனித்திட, நெஞ்சமதுவோ பாகென இளகும் வண்ணம்
இனித்திடு முருகன் புகழை, எமக்கென அளித்த வள்ளல்
மனத்தன ருணகிரிநாதன் மலரடி போற்றுவோமே.

ராகம்:சிந்துபைரவி பல்லவி தாளம்:ஆதி

குருபரன் முருகனின் திருப்புகழ் பாடிய
குருமணியே அருண கிரியே சரணம் (குரு)

அநுபல்லவி

ஒரு பதிவிடாமல் பலதிருப்பதி சென்று
உளமுருகித் துதித்த டிண்டிமகவியே (குரு)

சரணம்

அருணையம் பதியில் அவதரித்து, உலகில்
அலைந்து உழன்றலுத்து ஆவிவிடத் துணிந்தாய்
கருணையுடன் கந்தன் காத்துனை ஆட்கொண்டு
கவிபாட 'முத்தைத்தரு' அடியெடுத்துக் கொடுத்தான்
(குரு)

மன்னன் சபைவியக்க மால்மருகன் தன்னை
மரகத மயில்மீது வரவழைத்தாய் கவியால்
கன்னலும் தேனும்கற் கண்டும் நிகரோ அதற்கு!
கவிராஜனே குரு தாஸன் போற்றும் குருவே (குரு)

அந்தாதி திருவகுப்பு அநுபூதி விருத்தங்கள்
அலங்காரம் எனப்பல அருள்மிகு கவிமலர்கள்
கந்தன் புகழாரமாய் காணிக்கையாக்கினுய்
கிளியென அவன் திருக் கரத்தினிலிடம் பெற்றுய் (குரு)

நாமாவளி

திருப்புகழாம் அமுதம் தந்த ஸத்குருநாதா!
அருணகிரிநாதனே உன் திருவருளே தா!

குரு வணக்கம் (பொது)

அகம் புறம் தூய்மையில்லை அருந்தவ ஆற்றல் இல்லை
மிகப்பெரும் படிப்பும் இல்லை விழுமிய குணமும் இல்லை
உகப்புடன் காக்க செலவம் உடைய பந்துக்கள் இல்லை
குகப் பெருமானே! என்றன் குலகுருவான மூர்த்தே!

(அபங்க பெட்டு)

குருநாதன் அவனைப் பணிவோம்—அவன்
உருவைத் தியானம் செய்வோம்
திருவடிமலர் களிலே வீழ்வோம்—அவன்
தேடிவந்தருளே தருவான்
குருநாதனைச் சிந்தையில் வைப்போம்—குரு
மகிமையை என்றும் மறவோம்—மன
இருளை நீக்கிட வருவான்—பரம்
பொருளைக் காட்டியே அருள்வான்!

நாமாவளி

பரமனைக் காட்டிடும் குருநாதா
பதமலர் பணிந்தோம் குருநாதா
கருணை வடிவான குருநாதா - எமைக்
காத்தருள் புரிவாய் குருநாதா!

அடியார் வணக்கம்

(விருத்தம்)

உனைப் பலநாளும் திருப்புகழாலும்
உரைத்திடுவார் தம் குழுவே
உணர்த்திய போதந் தனைப்பரியாதொண்—
பொலச் சரணனுந் தொழுவேனோ!
பதமலருளத்தினு நினைவுறு கருத்தர் தாள்கள்
பணியவு மெனக்கு ஞானம் அருள்வாயே!
நானுன் திருவடி பேணும்படியிரு
போதுங்கருணையில் மறவாதுன்
நாமம் புகழ்பவர் பாதந்தொழ இனி
நாடும்படியருள் புரிவாயே!

★

பாடல்

(அபங்க மெட்டு)

அடியார்தம் பெருமைதன்னை அளவிடவும் சாத்யமாமோ
அடியார்தம் அன்பினுக்கு ஆண்டவன் அடிமையாவான்
அடியார்க்கும் அடியாளுக அருகினிலே வந்துநிற்பான் (அ)
சின்னஞ்சிறு ஊமைப்பிள்ளை செந்திலான்
கருணைநோக்கால்
கன்னலெனக் கவிகள் தந்தான்; குமரகுருபரனும் செல்வன்
(அ)
கூற்றுவனை உதைத்த சிவனின் குமரன்தன்
பெருமைபேசு-முரு
காற்றுப்படை தாளளித்த கவிவாணன் நக்கீரன்போல் (அ)
அமுதூறு திருப்புகழ்பாடி அறுமுகன் அருளேநாடி
அவன்கையில் கிளியாயமர்ந்த அருணகிரிநாதர்
போலவே (அ)
வெள்ளமெனத் திருப்புகழமுதைவையகத்தில்
பெருகவைத்த
வள்ளிமலை ஸ்வாமியவர்கள் வழிவந்த உத்தமராம் (அ)
திருப்புகழ் பாடிக்கொண்டே திருப்படிகள் ஏறிவந்து
திருத்தணிவாழ் முருகன்தன்னைத் தரிசிக்கும்பேறு
பெற்ற (அ)
அறுமுகவன் வழிபாடொன்றே அறமெனவே கொண்டு
இங்கு
அருட்சங்கம் கூட்டித்தினமும் அவன்புகழே
பாடிபணியும் (அ)
காவடிகள் சுமந்துஆடி கந்தன்புகழ் முழங்கிப்பாடி
சேவடிகள் போற்றித் துதிக்கும் சான்றோராம்
கோடிகோடி (அ).
குருதாசன் பணிந்துவணங்கும் கோடிகோடி அடியார்
குகனின்
இருதாளின் நிழலில் நம்மை எந்நாளும்
கூட்டிவைப்பார் (அ).

நாமாவளி

அடியார் திருவடியை கொள்வோம்
ஆண்டவன் அருளை அடைந்திடுவோம்
ஆண்டவன் அடியார் அருட்செல்வர்
அறநெறிதனில் நமைக் கூட்டிச் செல்வர்

ஸ்ரீவள்ளி திருக்கல்யாணப் பாடல்

(விருத்தம்)

பெரும்பைப்புனத்தினுள் சிற்றேனல் காக்கின்றபேதை
கொங்கை
விரும்புங்குமரனை மெய்யன்பினுல் மெல்ல மெல்லவுள்ள
அரும்பும் தனிப்பரமானந்தம் தித்தித்து அறிந்தஅன்றே
கரும்பும் துவர்த்து செந்தேனும்புளித்து
அறக்கைத்ததுவே

மாதவனோர் மாதவனாய் மாதவம் செய்திடலும்
வனமானாய் வந்தெதிர்த்த மலர்மானைப் புணர
பூதல மங்கையருருவாய் அவதரித்த வள்ளிப்
பொருப்புறையும் பொருப்பர்மனை விருப்பமுடன்
வளர்ந்து
தீதகலும் தினைகாத்து வேங்கை யுருவெடுத்த
செவ்வேளை அவ்வேளைச் சேர்ந்திரு கைக்கோளும்
காதலுடன் புரிந்திறைவன் வலப்பாகத் தமரும்
கன்னியெனும் வள்ளி கழலுன்னி வழுத்திடுவோம்!

பாடல்

ராகம்: மத்யமாவதி தாளம்: ஆதி

நம்பிடும் அடியார்க்கு நலமெலாம் அருள்மறை
நாயகனும் வடிவேலன்
நம்பியின் மகள்வள்ளி நாயகியை மணந்த
நற்சரிதையை இங்கு பாடுவோம்.

குலம்விளங்க ஒரு பெண் குழந்தை வேண்டுமென்று
கோரித் துதித்தான் நம்பிராஜன்
வலம் வரும்போது வனத்தில் வள்ளிக்கொடியருகே
வளர்மதி போல் குழந்தை கண்டான்.

மாதவன் அருளால் மலர்மகள் மானுருவில்
மங்கை வள்ளியையும் ஈன்றாள்
மாதவம் செய்த மன்னனும் குழந்தையை
மலரெனப் போற்றி வளர்த்தான்.

அறியாப் பருவத்திலே அழகன் முருகனின்மேல்
ஆசைகொண்டாள் எங்கள் வள்ளி
குறையாக் காதலுடன் குமரனே கணவனாய்க்
கொண்டு உறுதியுடன் நின்றாள்...

புனம் தனைக்காத்திடப் பொழுது புலர்ந்ததும்
போய்வருவாள் அந்தப் 'பொங்கி'
மனமது குகனிடம் மயங்கியதோர் நிலையில்
மங்கை தினைப்புனம் காத்தாள்.

நங்கையின் நிலைதன்னை நாரதன் மூலமாய்
நன்கறிந்தான் கந்த வேலன்
அங்கொரு வேடனாய் அழகுமானைத்தேடி
அவனும் வள்ளியருகில் வந்தான்.

வள்ளியுடன் குறும்பாய் வம்புகள் பேசி
வாது செய்தான் குறிஞ்சிவேடன்—குறக்
கள்ளியும் அவனைக் கடிந்து விரட்டியே
கந்தனையே துதிசெய்தாள்.

கோலமயில்வீரன் கோலூன்றிக் கிழவனாய்க்
குமரியைச் சோதிக்க வந்தான்!
ஓலமிட்டு அவளும் ஓடி அலையும்படி
ஆனைமுகனும் லீலை செய்தான்!

வேலவனை நினைந்து வருந்தியவள் அழைக்க
விருத்த வேடம்தனைக் களைந்தே
பாலமுருகனவன் பச்சை மயிலேறிவந்து
பாவையவளைச் சிறை கொண்டான்!

பாங்கியர் சொல்கேட்டுப் படையுடன் வந்தமன்னன்
பார்வையிலே தென்படாமல்
வேங்கை யெனவளர்ந்து வேடிக்கை செய்தபின்
வேலனும் அனுக்ரஹம் செய்தான்!

வேலன் மகிமைதன்னை வேடமன்னன் உணர்ந்தபின்
விருப்பமுடன் வள்ளியைத் தந்தான்!
பாலன் முருகனுக்குப் பாங்குடன் திருமணம்
பாரோர் வியந்திடச் செய்தான்!

கோலாகலமாகக் கூடினர் அடியவர்
கோலக்குமரன் மணம் காண
வேலாயுதன் குறவள்ளியின் கரம்பிடித்து
வதுவை கொண்டான் இன்பம் கண்டான்

வள்ளிமணாளன் அருள்வேண்டித் துதித்தேஎன்றும்
வணங்கி நிற்பான் குருதாஸன்!
வள்ளலென அருளை வாரிவழங்கி குகன்
வையகம் வாழ்ந்திடச் செய்வான்

★

சுருதிமழை பிலிற்றியிடும் சதுர்முகனுர்
சடங்கியற்றத் தோகை பாகன்
கருதிவிழி விருந்தருந்தக் கானத்து
வேடன் நம்பி கைந்நீர் வார்ப்ப
தருதி எனக் கையேந்தி பருதிமதி
விளக்கேந்த வள்ளி மானை
வருதினனக் கைபிடித்துத் தணிகையில்
மணந்தவன் தாள்கள் பணிவாம்!
புளிந்தேஶ கன்யா கனுபோக துங்க—
ஸ்தனுலிங் கனுஸக்த காஸ்மீர ராகம்!
நமஸ்யாம்யஹம் தாரகாரே தவோர :
ஸ்வ பக்தாவனே ஸர்வதா ஸானுராகம் ॥

நாமாவளி

வள்ளல் தொழு ஞானக் கழலோனே!
வள்ளி மணவாளப் பெருமாளே!
பொங்கியெனும் வள்ளி மணவாளா!
பொற்பதம் பணிந்தோம் அருளாளா!
குன்று தோருடிடும் பெருமான் - குறக்
கொடியை மணந்த குகப்பெருமான்.

திருக்கல்யாண உத்ஸவம்

கௌரி கல்யாண வைபவமே
வள்ளி கல்யாண வைபவமே
ஸேனு கல்யாண வைபவமே.

அலகில் தமிழாலுயர் ஸமர்த்தனே போற்றி!
அருணைநகர் கோபுரவிருப்பனே போற்றி!
அறுமுகஸ்வாமி யெனும் அத்தனே போற்றி!
அருணகிரி நாதஎனும் அப்பனே போற்றி!
அடல்மயில் நடாவிய ப்ரியத்தனே போற்றி!
அகில தலமோடிவரும் நிர்த்தனே போற்றி!
பெரிய மடமேவிய சுகத்தனே போற்றி!
பெரிய குறமாதணை புயத்தனே போற்றி!

கன்னிகைகள் முத்து இடுதல்

[சாமான்கள்: அலங்கரிக்கப்பட்ட உரல், உலக்கை, தாம்பாளத்தில் மங்களாட்சதை, தேங்காய், பட்டு வஸ்திரம், ஸ்வர்ண ஆபரணம், கன்னிகைகளுக்குச் சந்தனம் குங்குமம் தாம்பூலம் தட்சிணை.]

முத்துக் கொழிப்போம் முத்துக் கொழிப்போம்
முத்தமிழ்த் தெய்வமாம் முருகனடி பணிவோம்
திங்களும் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர்
தென் பரங்குன்றிலுறை பெருமாளே முருகா (மு)
சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயஞ்
சாரலார் செந்திலம் பதிவாழ்வே முருகா (மு)
வநிதை குறமகள்மகிழும் லீலாவிதர மதுர
பநுவல்தரு பழநிவளர் கோலாஹலா குஹா (மு)
முதுமாமறைக்குள் ஒருமா பொருட்குள்
மொழியேயுரைத்த குருநாத கடம்பா (மு)
மன்ருடி தந்த மைந்தா மிகுந்த
வம்பார்கடம்பை அணிவோனே முருகா (மு)
சூரர் குலம்வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற பெருமாளே முருகா (மு)
தினைப்புனமேவும் குறக்கொடி யோடுந்
திருத்தணிமேவும் பெருமாளே முருகா (மு)
வெற்றிவேல் முருகனுக்கு அரோஹரா!

கன்னிகைகள் முத்துக் குத்துதல்

வள்ளிமணவாளா வந்தருள் புரிவாய்

தென்பரங் குன்றிற் பெருமாளே முருகா (வா)
கயிலைமலையனைய செந்திற்பதி வாழ்வே (வா)
பழநிமலை மேனின்ற சுப்ரமண்யா (வா)
பொன்னேரகப்பதியில் வளர்ஸ்வாமிநாத (வா)
குன்றுதோருடும் என் குமர ஷண்முகனே (வா)
சோலைமலைமிசை மேவு பெருமாளே முருகா (வா)
குறமாது தனை மருவு குருபரனே குகனே (வா)

பாகவதர்கள் முத்துக் குத்துதல் 1

சோதியனலாவுதித்த சோணகிரி மாமலைக்குள்
சோபை வடகோபுரத்தில் உறைவோனே,
ஓதுவித்த நாதர் கற்க ஓதுவித்த முனி நாண
ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்தவா
நதியுடனராவு பூணு பரமர் குருநாதனான
நடைபெறு கடூரமான மயில் வீரா.
தினைப்புன முன்னே நடந்து குறக்கொடியையே மணந்து
செகத்தை முழுதாள வந்த பெரியோனே,

வள்ளிக்குழாமடர்ந்த வள்ளிக்கல்மீது சென்று
வள்ளிக்கு வேடை கொண்ட பெருமாளே!

(ஆதி)

வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்முருகா
வேல்முருகா வேல்முருகா வேலவா குகா.

முத்து ஸமர்ப்பணம் 1

அரியுமயனும் வெருவ வுருவ அரியகிரியை எறிவோனே
அயிலு மயிலு மறமும் நிறமும் அழகுமுடையவா
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூது சென்ற
பரமனருளால் வளர்ந்த குமரேசா
அரஹரசிவாய சம்பு குருபரா குமார நம்பும்
அடியர்தமை ஆளவந்த பெருமாளே
வேலையன்பு கூரவந்த ஏக தந்த யானை கண்டு
வேடர்மங்கை ஓடி அஞ்ச அணைவோனே
தினைவேடர் காவல்தங்கு மலைகாடெலாமுழன்று
சிறுபேதை கால் பணிந்த குமரேசா,
சரவணபவ சரவணபவ சரவணபவ சரவணபவ
சரவணபவ சரவணபவ ஷண்முகநாதா!

முத்துக் குத்துதல் 2

வெற்றி வேலன் புகழ் பாடுவோம்—வள்ளிநாயகன்
வெற்றி வேலன் புகழ் பாடுவோம்
திறமாதவர்க் கனிந்துன் இருபாத பத்மமுய்ந்த
திருவேரகத் தமர்ந்த பெருமாளே என்று (வெ)
கார்போலு மேனிபெற்ற மாகாளி வாலைசத்தி
காமாரிவாமி பெற்ற பெருமாளே என்று (வெ)
ஊனும் உயிராய் வளர்ந்து ஓசையுடன் வாழ்வதந்து
ஊதிமலை மீதுகந்தப் பெருமாளே என்று (வெ)
தேரார்கள் நாடுசுட்ட சூரர்கள் மாளவெட்டு
தீராகுகா குறத்தி மணவாளா என்று (வெ)
திருமால் அளித்தருளும் ஒரு ஞானபத்தினியை
திகழ்மார் புறத்தழுவு மயில்வேலா என்று (வெ)

(திரிபுடை)

வெற்றிவேலன் புகழ்பாடுவோம்—வள்ளிநாயகன்
வெற்றிவேலன் புகழ்பாடுவோம்

முத்து ஸ்மர்ப்பணம் 2

உததிமீதி லேசாயும் உலகமூடு சீர்பாத
உவணமூர்தி மாமாயன் மருகோனே
அங்கைவேல் விட்டருளி யிந்த்ரலோ கத்தின்மகி
மூண்டரேறக் கிருபை கொண்ட பாலா
மணிசெய்மாட மாமேடை சிகரமோடு வாகான
மயிலை மேவி வாழ்தேவர் பெருமாளே
சுவர்க்க லோகமீகாம சமஸ்தலோக பூபால
தொடுத்த நீப வேல்வீர வயலூரா
ஏடார் குழற்சுருபி ஞானதனத்தி மிகு
மேராள் குறத்தி திருமண வாளா
கார்த்திகேய கார்த்திகேய கார்த்திகேய கார்த்திகேய
கார்த்திகேய கார்த்திகேய கந்தவேளே

முத்துக் குத்துதல் 3

எந்தையர் தேடும் அன்பர் ஸஹாயன்
எங்கள் ஸ்வாமி யருள் பாலா
தினைவன மானுங் கனவன மானும்
செறிவுடன் மேவுந் திருமார்பா.

வாளுடு புகழ்நாடு தேனுறு புடைசூழ
மாயூரகிரி மேவு பெருமாளே
வேங்கையுமுயர்ந்த தீம்புனமிருந்த
ஏந்திழையினின்ப மணவாளா
தானே வளர்ந்து தானே யிருந்த
தார் வேணி யெந்தை யருள் பாலா
தேனெழு புனத்தில் மான்விழிக் குறத்தி
சேரமருவுற்ற திரள் தோளா.

(ஏகம்)

கந்தா கடம்பா கந்தா கடம்பா
கந்தா கடம்பா கதிர்வேலவா

முத்து ஸ்மர்ப்பணம் 3

சிறையிட்ட சூரர் தனைவெட்டி ஞானத்
திருமுட்டமேவு பெருமாளே
கோதையிருபங்கின் மேவு வளர்கும்ப
கோண நகர் வந்த பெருமாளே
ஒளிரொளி நாதர்க் கொருமகன் ஆகி

திருவளர் சேலத் தமர்வோனே
சுந்தரஞான மென்குறமாது
தன்திருமார்பி லணைவோனே
பகர்தரு குறமகள் தருவமைநிதையு
மிருபுடையுறவரு பெருமாளே
சண்முகனே சண்முகனே சண்முகனே சண்முகனே
சண்முகனே சண்முகனே சக்திமகனே

நாமாவளி

அன்னை வள்ளி நாயகனே அறுமுகவேலா
அன்புடனே ஆதரிப்பாய் அரனுமை பாலா
பச்சைமயில் வாகனனே பார்வதி பாலா
பட்சமுடன் காத்தருள்வாய் வள்ளிமணாளா
சங்கரன் உமை மகிழ் பாலகனே
சரணம் சரணம் வள்ளி நாயகனே
வேலவனே கருணாகரனே
வேடர் குலக்கொடி நாயகனே.

அநுபூதி ஆனந்தம்

(முஸலந்ருத்யம்)

[ஆண்டவனை வழிபட்டு அவனது அளவற்ற கருணையினால் அநுபூதி பெற்று அந்த ஆனந்தத்தில் இறைவனுடன் ஒன்றி விடுவதே இந்த ஆடலின் பொருள்.]

விருத்தம்

அருவமும் உருவமுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர்முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும்
கொண்டே
ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய!

தூசாமணியும் துகிலும் புனைவாள்
நேசா! முருகா! நினதன்பருளால்
ஆசா நிகளம் துகளாயினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.

★

உல்லாச நிராகுல யோகவிதச்
சல்லாப விநோதனும் நீ அலையோ
எல்லாம் அற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா சுரபூபதியே

— முருகா சரணம்

திணியான மனோசிலை மீதுனதாள்
அணியார் அரவிந்தமரும்புமதோ
'பணியா' என வள்ளி பதம் பணியும்
தணியா அதி மோக தயாபரனே
— முருகா சரணம்

கூகா என என் கிளை கூடியழப்
போகா வகை மெய்ப் பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே
— முருகா சரணம்

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகும் செயல் தந்துணர் வென்றருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே
— முருகா சரணம்

உதியா மரியா உணரா மறவா
விதிமால் அறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதிக் காவல சூர பயங்கரனே
— முருகா சரணம்

நாதா குமரா நம என்றரனார்
ஓதாய் என ஓதிய தெப்பொருள்தான்?
வேதா முதல் விண்ணவர் சூடு மலர்ப்
பாதா குறமின் பதசேகரனே
— முருகா சரணம்

என் தாயுமெனக் கருள் தந்தையுநீ
சிந்தா குலமானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர் வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே
— முருகா சரணம்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே
— முருகா சரணம்

தா தத்தை தளாங்கு தத்தரிகிடதோம்
தரிகிடதோம் தரிகிடதோம்

நாமாவளி (மூன்று தடவைகள்)

சிங்கார ரூப மயில் வாஹந—முருகா
கந்தா குமரா சிவ தேசிகா
நங்கை குறவள்ளியின் மணாளனே—எந்த
நாளும் அடியாரைக் காக்கும் வேலனே.
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே
உள்ளத்தை நோக்க அருள்வாயே

வர்ணனை

உலகு குளிர எமது மதியில் ஒழுகு அமுதகிரணமே!
உருகும் அடியர் இதயநெகிழ உணர்வில் எழுநல் உதயமே
கலையும் நிறையும் அறிவும் முதிர முதிருமதுர நறவமே!
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருக சலதியே!
அலகில் புவனம் முடியும் வெளியில் அளியும் ஒளியின்
நிலயமே
அறிவுள் அறிவை அறியும் அவரும் அறிய அரிய பிரமமே!
மலையின் மகள் கண்மணியனைய மதலை பாலமுருகனே
வளமை தழுவு பரிதிபுரியின் மருவு குமரா!
காசி ராமேசுரம் ரத்னகிரி சர்ப்பகிரி
ஆருர் வேலூர் தெவூர் கச்சி மதுரைப்பதியல்
காரை மூதூரருணக்கிரி திருத்தணியல்—செந்தில்நாகை
காழிவேளூர் பழநிக்கிரி குறுக்கை திரு
நாவலூர் திருவெணெய்ப்பதியின் மிக்கதிகழ்
காதல்சோலை வளர்வெற்பிலுறை முத்தர்புகழ்
தம்பிரானே!

சிரமுயர் திருப்பரங்குன்றினும் பொழில்சூழ்ந்த
திருவாவினன் குடியிலும்
திரையுலவு திருச்செந்தூரிலும் தடந்
திருவேரகந் தன்னிலும்

அரவுநதிதவழ் சோலைமலையினும் உன் அபிமானம்
ஆன பல்பதி மீதினும்
மணிகொடுமள் தரமுதல் எக்குவடும் இனிய
குன்றக் குடியினும் சிறந்த

உருவாகி அருவாகி அணுவுக்குள் அணுவாகி
உயிருக்குள் உயிருமாகி

ஒளிகொண்டு வெளிகொண்டு களிகொண்டு
விளையாடு முருகா!

சீர்கொண்டதெய்வ வதனங்களாறும், திகழ்கடப்பந்
தார்கொண்டபன்னிரு தோள்களும் தாமரைத்தாள்களும்
ஓர்
கூர்கொண்ட வேலும்மயிலும் நற்கோழிக் கொடியும்,
அருட்
கார்கொண்ட வண்மை தணிகாசல முருகனே!

வண்டாடநறவூறி மணம்மீறுமணிநீப மாலையாடக்
குழைகள்சேர்
மகரகுண்டல்மாட வச்சிரகேயூரமுடன் மார்பிற்பதக்க
மாட
கொண்டாடு நெற்றியிற்சுட்டியாட, கரியகொந்தளக்
குச்சியாட
கோலநெடுவான் முகடுதொடு கடல்திவலைபோல்குறுவெயர்
முகத்திலாட
கண்டாடும் அதரம் குவிந்தாட மாற்றேறு
கனகத்திழைத்த அரைஞாண்
கதிர்விரித்தாட, நவமணியிழைல்செய்த இருகாலிற்
சதங்கையாட
திண்டாடும் அசுரரைக் கொல்லவரு தீரனே!

சிலத்தபோதனர்கள் ஆனந்தமீறி திருக்கண்ணீர் அருவி
கொட்ட
தேவர்கின்னரர் கருடர் கந்தர்வர் ஆகியோர்செங்கைமலரி
மாரிகொட்ட
பாலத்தில்நாட்டம் படைத்தவனோடு உமையும்பழிக்கும்
நல்லுவகைகொட்ட
பருவதாகாரப் பெரும்பூதகணநாதர் பல்லியம் கொட்ட,
முற்றும்
ஆலத்தெழும் தகுவர்நெஞ்சம் பறைகொட்ட அறமகளிர்
வீணைகொட்ட
அறநீதிமன்னர் மனைதொறு முரசம்கொட்ட
அசலந்தொறும் களிப்பால்

கோலச்சிறுவர் தொண்டகம் கொட்ட
குளிர்பொழில் பழநியில் வளர் குமர குருபரா!

கானச்சிறுமானை நினைந்து ஏனற்புனமீது நடந்து
காதற் கிளியொடு மொழிந்து சிலைவேடர்
காணக் கனியாகவளர்ந்து ஞானக்குறமானை மணந்து
காழிப்பதி மேவியுகந்த பெருமாளே!

அந்தண் மறைவேள்வி காவற்கார
செந்தமிழ் சொற்பாவின் மாலைக்கார
அண்டர் உபகார சேவற்கார—முடிமேலே

அஞ்சலி செய்வோர்கள் நேயக்கார
குன்றுருவ ஏவும் வேலைக்கார
அந்தம் வெகுவான ரூபக்கார—எழிலான

சித்துர மின்மேவு போகக்கார
விந்தை குறமாது வேளைக்கார
செஞ் சொலடியார்கள் வாரக்கார—
எதிரான

செஞ்சமரை மாயு மாயக்கார
துங்கரண சூர சூறைக்கார
செந்திநகர் வாழுமாண்மைக்கார!

கமலமு கங்களுங் கோமளத் திலங்கு
நகையு நெடுங்கணுங் காதினிற்றுலங்கு
கனக குதம்பையும் தோடும் வஜ்ர அங்கதமும்
—அடற்சுடர் வேலும்

கடிதுலகெங்கணுந் தாடியிட்டு வந்த
மயிலுமிலங் கலங்காரப் பொற் சதங்கை
கழலொலி தண்டையங் காலும் மொக்கவருவோனே

அமணரடங்கலும் கூடலிற்றிரண்டு
கழுவிலுதைந்துதைந் தேறவிட்டு நின்ற
அபிநவ துங்க கங்கா நதிக்கு மைந்த!

அமரர் வணங்கு கந்தா குறத்தி கொங்கை
தனில்முழுகும் கடம்பா மிகுந்த செஞ் சொல்
அருணைநெடுந் தடங்கோபுரத் தமர்ந்த
அறுமுகப் பெருமாளே

குறவர் கூட்டத்தில்நின்று கிழவனாய்ப் புக்குநின்று
குருவியோட்டித் திரிந்த — தவமானைக்
குணமதாக்கிச் சிறந்த வடிவுகாட்டிப் புணர்ந்த
குமரகோட்டத் தமர்ந்த பெருமாளே!

சுடரனைய திருமேனி யுடையழகு முதுஞான
சொரூப கிரியிடமேவு முகமாறும்
சுரர் தெரியலளிபாட மழலைகதி நறைபாய
துகிரிதழின் மொழிவேத மணம் வீச,

அடர்ப்பவள வொளிபாய அரிய பரிபுரமாட
அயில்கர மொடெழில் தோகை மயிலேறி
அடியனிருவினை நீறுபட அமரரிதுபூரை
அதிசயமென் அருள்பாட வரவேணும்!

எழுதறிய அறுமுகமும் மணிநுதலும் வயிரமிடை
யிட்டுச்சமைந்த செஞ்சுட்டிக் கலன்களும்,
துங்கநீள்
பன்னிரு கருணைவிழிமலரும் இலகுபதினிரு குழையும்
ரத்நக் குதம்பையும் பத்மக் கரங்களும்
செம்பொனூலும் மொழிபுகழுமுடைமணியும்
அரைவடமும்
அடியிணையும் செங்கைவேலும் முழுதும் அழகியகுமர!
கிரிகுமரியுடனுருகு முக்கட்சிவன் பெறும் சற்புத்ர
உம்பர் தம் தம்பிரானே! வருக வருக!
தன்னேரில்லா நுதல்திலகம் தரிக்க வருக
விழியினில்மை சாத்தவருக! மேலாகத்தானே
வருக! தேவர் தொழும் மன்னே வருக!
மாமாலின் மருகா வருக வருகவே!
வளஞ்சேர் பழநிச் சிவகிரி வாழ்வடிவேல் முருகா
வருக வருகவே!

★

ஸ்புரத் ரத்ந கேயூர ஹாராபிராம:
சலத் குண்டலஸ்ரீ லஸத்கண்ட பாக: |
கடௌ பீதவாஸா: கரே சாருஶக்தி:
புரஸ்தாந் மமாஸ்தாம் புராரேஸ் தநூஜ: ||

நாமாவளி

அரஹர ஸுந்தர ஆறுமுகா
குறமகள் இங்கித மணவாளா

நீலநிற மால்தனக்கு மருகோனே
வீறுமயில் மீதிலுற்று வருவாயே
குன்றெவாமயர்ந்த எழிற்குமரனும் அவன்
குறக்கொடியை மணக்கவரும் முருகனும் குகன்
அன்னைவள்ளி நாயகனே அறுமுகவேலா
அன்புடனே ஆதரிப்பாய் அரனுமைபாலா

பரதேசக் கோலம்

ராகம்: ஆரபி தாளம்: ஆதி

பல்லவி

பழநியப்பன் இங்கு பரதேசக் கோலம்வர
பார்த்துப் பரவசமடைவோம்

அநுபல்லவி

அழகிய மயில் வீரன் அறுபடை வீடுவிட்டு
அன்னை வள்ளியைத் தேடி மணமகனாகவே (ப)

சரணம்

புண்டரிக விழியாளன் அண்டர்மகள் மணவாளன்
புந்தி நிறையறிவாளன் உயர் தோளன்
தண்டரள மணிமார்பன்செம்பொனெழில் செறிரூபன்
தண்டமிழின் மிகுநேயன் முருகேசன் (ப)

சந்தனந் திமிர்ந்தணைந்து குங்குமங்கடம் பிலங்கு
சண்பகஞ் செறிந்திலங்கு திரடோளும்
தண்டையஞ் சிலம்பலம்பவெண்டையஞ்சலன்
சலென்று
சஞ்சிதஞ் சதங்கைகொஞ்ச சங்கரிபாலன் (ப)

தேவர் மூவர்யாவரும் தரிசித்து மகிழ்ந்திட
பாவலர்கள் நல்லிசை பாடித் துதித்திட
ஏவருந்துதிக்க நின்ற ஈராறு தோளழகன்
எந்நாளும் குருதாஸன் இருதாள் வணங்கிட (ப)

மாலை மாற்றுதல்

மாலைசூட்டினாள் வள்ளி மாலை சூட்டினாள்
மழலைகள் விளம்பிமொய்த்த அறுவர்முலையுண்டு
முற்றும்
வடிவுடன் வளர்ந்திருக்கும் வாழ்வினன்
வடிவேலனுக்கு (மாலை)

மாலைசூட்டினான் முருகன் மாலைசூட்டினான்
மின்னூல் மருங்குல்பொற்பு முலைமாதிளங்குறத்தி
மிகுமாலோடன்பு வைத்த மங்கைவள்ளியின்
கழுத்தில் (மாலை)
மாலைசூட்டினாள் வள்ளி மாலைசூட்டினாள்
மலையிறை மடந்தைபெற்ற ஒருமதலை யென்றுதித்து
மலையிடியவும் துணித்த தோளினான் முருகனுக்கு (மாலை)
மாலைசூட்டினான் முருகன் மாலைசூட்டினான்
நெய்க்கமல மொக்குமுலை மெய்க்குறவியிச்சையுற
நித்தம் இறுகத்தழுவு மார்பன் வள்ளியின் கழுத்தில்
(மாலை)
மாலை சூட்டினாள் வள்ளி மாலை சூட்டினாள்
ஆன மொழியே பகர்ந்து சோலை மலை மேவு கந்தன்
ஆதி முதலாக வந்த ஆறுமுகநாதனுக்கு (மாலை)
மாலை சூட்டினான் முருகன் மாலை சூட்டினான்
மாதினைப்புனமீதிருக்கு மைவாள்விழிக்குறமாதினைத்திரு
மார்பணைத்தமயூர அற்புத மாரன் கந்த வேலனவன்
(மாலை)

லாலி

தெவயானைபங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல் வீர மிஞ்சுகதிர் வடிவேலா முருகா (லாலி)
வாலசந்த்ர சூடி சந்த வேத மந்த்ர ரூபி அம்பை
வாணி பஞ்சபாணி தந்த முருகோனே குமரா (லாலி)
வால இளம்பிறை தும்பை யாறு கடுக்கை கரந்தை
வாசுகியைப் புனை நம்பர் தருசேயே முருகா (லாலி)
குஞ்சர முகற்கிளைய கந்தனெனவெற்றி பெறு
கொங்கண கிரிக்குள் வளர் பெருமாளே முருகா (லாலி)
துளபமணி மார்பசக்ர தரனரிமுராரி சர்ப்ப
துயிலதரனுதிர்த்த மருகோனே முருகா (லாலி)
வடிவார் குறத்திதன் பொனடிமீது நித்தமுந்தன்
முடியான துற்றுகந்து பணிவோனே முருகா (லாலி)
மெச்சிக்குறத்தி தனமிச்சித் தணைத்துருகி
மிக்குப் பணைத்த மணி மார்பனே முருகா (லாலி)
நிச நாரணாதி திருமருகா வுலாசமிகு
நிகழ் போதமான பர முருகோனே குமரா (லாலி)

சரவணபவாவென்று வற்கரமுமாகி வளர்
பழநிமலை மேனின்ற சுப்ரமண்யா (லாலி)

திருக்குலவு மொருநீல மலர்ச்சுனையிலழகான
திருத்தணிகை மலை மேவு பெருமாளே (லாலி)

அமுதாசனத்தி குற மடவாள் கரிப்பெண்ணுடும்
அருணாசலத்திலுறை பெருமாளே முருகா (லாலி)

தலண்டு சோபானே

[சாமான்கள்: வாசனைத் தைலம், நலங்கு மஞ்சள், புதிய வஸ்திரங்கள், ஹாரம், ஆபரணங்கள், திருமாங்கல்ய சூத்ரம், மங்களாட்சதை]

ராகம்: பந்துவராளி தாளம்: ரூபகம்

வண்ணமயில் வேலனுடன் வள்ளியம்மை வலதுபுறம்
புன்னகைசேர் முகத்திலவளாய்ப் பொலிவுடனே
அமர்ந்திருக்க—சோபானே

குலமகளிர் கூடிநின்று மங்கள கானம் பொழிய
மலைமகளின் மைந்தனையே மங்கை வள்ளி நமஸ்கரித்தாள்
—சோபானே

தங்கமய ஆசனத்தில் தம்பதியர் அமர்ந்திருக்க
எங்கும் மணங்கமழும் மலர்த்தைலந்தனைச் சாற்றினரே
—சோபானே

பஞ்சாமிர்தம் பன்னீருடன் பால் சந்தனம் விபூதி
பாங்குடனே அபிஷேகம் பரவசமாம் காட்சியம்மா
—சோபானே

மங்களஸ்நானம் முடித்து, புத்துடைகள் தானணிந்து
தங்கவைர நகை பலவும் தரித்துவந்தாள் வள்ளியம்மை
—சோபானே

கண்கவரும் உடையணிந்து கந்தன்வந்த திருக்கோலம்
கண்நிறைந்த காட்சியெனக் கண்டோம் ஆனந்தம்
கொண்டோம்—சோபானே

வஸ்திரங்கள் ஓதியிடுதல்

(முருகனுக்கு)

சதாயஸ்வாஹேத்யாஹ—சதாயுர்வை புருஷஶ்ஶதவீர்ய
ஆயுரேவ வீர்யமவருந்தே ஸஹஸ்ரயாஸ்வாஹேத்யாஹ
ஆயுர்வை ஸஹஸ்ரம் ஆயுரேவாவருந்தே—ஸர்வஸ்மை

ஸ்வாஹேத்யாஹ அபரிதமேவாவருந்தே—
ச்ரேயோவஸீய
ஆயத்ஸம் பூதம்பூதம் சித்ர:கேது: ப்ரபாநாபான்
ஸம்பான்
ஜ்யோதிஷ்மாகும் தேஜஸ்வானுதபக்கும் ஸ்தபன்
அபிதபன்னு ரோசனே ரோசமான: சோபன:
சோபமான:
கல்யாண: ஸ்ரீவல்லி கல்யாண மஹோத்ஸவத்தில்
மாமனார் ஸ்ரீநம்பி மஹாராஜாவின் ஆசீர்வாதம்
பட்டு வேஷ்டி, உத்தரீயம், அங்குலீயம், ஸகல
ஸௌபாக்யம் பத்ரம் புஷ்பம்.

(வள்ளிக்கு)

நவோ நவோ பவதி ஜாயமானோன்ஹாம் கேதுருஷஸா
மேத்யக்ரே
பாகந்தேவேப்யோ விததாத்யாயன் ப்ர சந்தமாஸ்திரதி
தீர்க்கமாயு: ஸுமங்கலீரியம் வதூரமாகும் ஸமேத
பச்யத ஸௌபாக்யமஸ்மை தத்வாயாதாஸ்தம்விபரேதன
இமாம் த்வமீந்த்ர மீடுபஸ்ஸுபுத்ராகும் ஸுபகாம் குரு
தஸாஸ்யாம் புத்ரானுதேஹி பதிமேகாதஸம் க்ருதி!
ரோசனே ரோசமான: ஸோபன: ஸோபன: ஸோபமான:
கல்யாண:
ஸ்ரீவல்லீவிவாஹமஹோத்ஸவத்தில் மாமனார் ஸ்ரீ
பரமேச்வரனின் ஆசீர்வாதம் கூறைப்புடவை, பட்டு
ரவிக்கை திருமாங்கல்யம்,மஞ்சள் குங்குமம்பத்ரம் புஷ்பம்.

நாமாவளி

வேடர் மங்கை ஓடி அஞ்ச அணைவோனே
மேரு மங்கையாள வந்த பெருமாளே
சிந்தூர பார்வதி சுதாகர—முருகா
சிந்தான சோதி கதிர்வேலவ!

ப்ரவரம்

(வரன்)

சதுர்வேத ஸகாத்யாயினே ஸகல ஸுராஸுரமுனிவந்த்ய
திவ்ய சரணாரவிந்த புவனமோஹந ஸௌந்தர்ய திவ்ய
மங்கள விக்ரஹ பரமானந்த தாத்பர்யாநு ஸந்தான
மௌனி க்ருத பத்ம ப்ருங்க அஷ்டாங்கயோக ஸம்யுக்த
ஷடாதார தத்வ சைதன்யஸ்வரூப சித்விலாஸ

நித்யானந்த ஸாக்ஷாத்கார ஸகலகிரிவாஸினே
ஸகலபூத ஹ்ருத் கோஸாந்தரஸ்தித அகண்ட
பரிபூரணனந்த அமித தேஜோமயாய ஸ்ரீ
கைலாஸாதிபதே:
ஸ்ரீ சந்த்ர மௌலீஸ்வர வர்மண: கனிஷ்டபுத்ராய
ஸ்ரீஸுப்ரஹ்மண்ய வர்மணே ஸாக்ஷாத் பரிபூரணதமஸ்வ
ரூபாய வராய

(வது)

சதுர்வேத ஸாகாத்யாயினீம் ஸக்ருத்ப்ரபன்ன
ஸம்ரக்ஷிணீம்
அகிலாண்டகோடி ப்ரும்மாண்ட நாயகீம் ஸ்யாமாம்
பங்கஜ—
தாரிணீம் மணிலஸத்தாடங்க கர்ணோஜ்வலாம் ஸரவண
பவஸ்ய ஸவ்யே ஸ்திதாம் ஸ்ரீமஹாவிஷ்ணு அம்ஸபூதாம்
ஸ்ரீநம்பிராஜ ஸங்கல்ப தனயாம் ஸ்ரீவல்லீநாம்னீம்
இமாம் கன்யாம்

வ்ருணீமஹே

முருகன் பெருமை

காணொணாதது உருவோடருவது பேசொணாதது
உரையே
தருவது, காணு நான்மறைமுடிவாய் நிறைவது பஞ்சபூதக்
காய பாசமதனிலே யுறைவது, மாயமாயுடலறியா
வகையது
காயமானவரெதிரேயவரென வந்து பேசிப்பேணொணாதது,
வெளியே யொளியது, மாயனாரயனறியா வகையது, பேத
பேதமொடுலகாய் வளர்வது, விந்து நாதப் பேருமாய்
கலையறிவாய் துரிய அதீதமானது, வினையேன் முடிதவ
பேறுமாயருள் நிறைவாய் வினவது ஒன்று நீயே

தரணிதனில் ஆறுபத் தறுகோடி தீர்த்தம் உன்
சரவணத்துள் அடக்கம்
சாற்றுமோர் எழுகோடி மந்திரங்களும் உன்
ஷடாக்ஷரத்துள் அடக்கம்
விரதமிகு நவகோடி சித்தர்களும் உனது சுப
வீக்ஷணந்தனில் அடக்கம்
மேலான தேவர்லயங்களும் உன் ஆறுபடை
வீட்டினிற்குள் அடக்கம்

இரவி முதல் முப்பத்து முக்கோடித் தேவரும்உன்
இதய கமலத்து அடக்கம்
ஈரேழு புவனமுதல் அண்டங்கள் பலவும் உன்
இடத்தினில் அடக்கம் ஐயா!
வரிசைமிகு பக்தஜன பரிபாலனு! மோக
வள்ளி குஞ்சரிமணுளா!
வனசமலர் அயன்மதனை அருள் ஸரஸகோபாலன்
மருக! சரவண முருகனே!

அலைகடலடைத்தே மகாகோர ராவணனை மணிமுடி
துணித்து
ஆவியேயான சானகியை அடலுடன ழைத்தே கொள்
மாயோனை மாமனெனு மருகோனே!
அறுகினை முடித்தோனை யாதாரமானவனை மழுவுழை
பிடித்தோனை மாகாளி நாண முனம் அவைதனில்
நடித்தோனை மாதாதையே எனவும் வருவோனே!

செனனி சங்கரி ஆரணி நாரணி விமலி எண்குணபூரணி
காரணி சிவை பரம்பரையாகிய பார்வதி அருள்பாலா!
வேழமுகற்குத் தம்பியெனுந் திருமுருகோனே
வேதவனத்திற் சங்கரர் தந்தருள் பெருமாளே.

குறிஞ்சி வாழு மறவர் நாயக! ஆதி விநாயகர்
இளையநாயக!
காவிரி நாயக வடிவிஞயக ஆண்டஞயக எங்கள் மானின்
மகிழுநாயக தேவர்கள் நாயக கவுரிநாயகஞர் குருநாயக!

குறவர் குறிஞ்சியூடே சேஞெயிடும்இதன்
மேலரிவையை
மேவிய மயல்கொள லீலைகள் செய்து சேர நாடிய
திருடா அருடரு கந்தவேளே!

வள்ளி பெருமை

செண்பகாடவியினும் இதனினுமுயர் சந்தஞடவியினு
முறை
குறமகள் செப்பொனூபுர கமலமும், வளையணி
புதுவேயும் இந்துவாண்முகவனச ம்ருகமத குங்குமாசல
யுகளமு மதுரித இந்தாளம்ருத வசனமு முறுவலு
மபிராம இந்த்ர கோபமு மரகத வடிவமு மிந்த்ரசாபமு
மிருகுழையொடு பொருமிந்த்ரநீலமு மடவிடை
யமைந்த அன்னையே! அருள் வடிவே!

வகுளமு முகுளித வழைகளுமளிபுன வள்ளிக்குலாத்தி கிரி வாழும் வனசரர் மரபினில் வருமொரு மரகத வள்ளியே! எமதன்னையே!

நாமாவளி

தனி மயிலேறும் பெருமாளே!
தணிகையில்வாழ் செங்கதிர் வேலா!
குறமகள் தனை மண மருள்வோனே!
குருமலை மருவிய பெருமாளே!

தேவஸேனா பரிணயம்

கல்யாணம் ததாம் கடாக்ஷலவத: பக்தாய ஹத்வா ரிபூன்
கல்யாணாசல கார்முகஸ்ய தநுஜம் காருண்ய பாதோநிதிம்
கல்யாணாக்ருதிம் அவ்யயம் கிரிஸுதாப்ரேமாஸ்பதம் பாவநம்
கல்யாணாய பஜே஽நுஜம் கணபதே: ஸ்ரீ தேவஸேநாபதிம்

நாமாவளி

திருப்பரங்குன்றினிற் பெருமாளே
தெய்வயானை மகிழ் மணவாளா!

லக்னாஷ்டகம்

(ஒவ்வொரு பாடலின் முடிவிலும் வள்ளி மணவாளப் பெருமானுக்கு அரோஹரா என்று முழங்கி மங்களாட்சதையைத் தெய்வத் தம்பதியர் திருவடியில் சமர்ப்பிக்க வேண்டும்.)

1

கணபதியும் குளிர்மதியும் கதிரவனும், களைப்பின்றிக்
காலமெலாம் பகலவனைச் சுற்றிவரும் கோள்களுமாய்
மணமக்கள் அமர்ந்துள்ள மண்டபத்தில் தாம்இருந்து
மங்களம் பொங்கிடவே மனங்கனிந்து வாழ்த்துகின்றார்.

2

இமையோர் தம்கூட்டத்தே யட்சரும் கின்னரரும்
இனிய குரலெடுத்து இசைமுழக்கம் செய்கின்றார்
உமையவள் மைந்தனையே ஒரு குறவள்ளியிங்கு
உளமகிழ மணங்கொள்ளும் ஒப்பற்ற வேளையிலே!

3

அமரர்தம் கோமானும் அக்கினியும் அந்தகனும்
அரியொடு அம்பலவன் அயனும் மற்றவரும்
அவரவர் பரிவாரம் உடன்தொடர வந்துள்ளார்
அறுமுகன் வள்ளியரை அன்புடன் வாழ்த்திடவே!

4

கௌசிகரும், துர்வாசர் காச்யபரொடுவசிட்டர்
கண்வர் அகத்தியரும் அருந்தவப் பெரியோரெல்லாம்
தாமீட்டிய தவப்பயனைத் தந்தாசி வழங்கிடவே
தமருடன் அமர்ந்துள்ளார் திருமண மண்டபத்தே!

5

கலைமகளும் அலைமகளும் மலைமகளும் அருந்ததியும்
கற்பின் உருவானோர் ஸீதை ஸாவித்ரியுடன்
முனிபத்நி பலரும்தம் கற்பனலின் பயனளித்து
முருகனை வாழ்த்திடவே முன் வந்து நிற்கின்றார்!

6

கங்கையும் நர்மதையும் காவிரி கோதாவரியும்
கரைபுரண் டோடிவரும் புண்ணிய நதிகளெல்லாம்
தாங்கொண்ட பாவச்சுமைதனைக் கழுவித் தூய்மைபெற
தாம்வந்து அமர்ந்துள்ளார் தம்பதியின் திருமுன்னே!

7

நந்தியும் பைரவனும் சண்டேசன் இடும்பனுடன்
நவவீரர் நம்பியுடன் நல்லோர்கள் பலகோடி
கந்தனது திருமணமாம் கண்கொள்ளாக் காட்சிதனைக்
கண்டு மகிழ்ந்திடவே காத்திங்கு நிற்கின்றார்.

8

மறையோதும் அந்தணரும் மாண்புசேர் மங்கையரும்
இறைவனின் தொண்டாற்றும் எண்ணற்ற பக்தருடன்
முருகனின் திருநாமம் முழங்கிடும் அடியாரொடு
முன்வந்து அமர்ந்துள்ளார் முருகன் திருமணங்காண!

மங்கல வேளை தன்னில்
மகிழ்வுடன் முழக்கம் செய்வோம்

வள்ளிமணவாளப் பெருமாளுக்கு அரோஹரா!

(மங்கல நாண் பூட்டுதல்)

மாங்கல்யம் தந்துநாநேரு மமஜீவன ஹேதுநா
கண்டே பத்நாமிஸுபகே த்வம்ஜீவ ஶரதஶ்ஶதம்!
மங்கல நாணைப்பூட்டி மங்கல வாழ்வேதந்தேன்
மாண்புற வாழ்வாய்நீயும் மங்கையே! பலநூறுண்டு!

(அட்சதை-பொரி இடுதல்)

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டுவெற்பனை
செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக்கடம்பனைக் கார்மயில் வாகனனை
சாந்துணைப் போதும் மறவாதவர்க்கொரு தாழ்வில்லையே

தெவயானை அங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சு கதிர் வடிவேலா
அறிவாகமும் பெருக இடரானதும் தொலைய
அருள்ஞான இன்பது புரிவாயே!

நாமாவளி

திருத்தணி மலைதனில் அமர்ந்தவனே
தினைப்புன வள்ளியை மணந்தவனே!
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே!
உள்ளத்தை நோக்க அருள்வாயே!

வள்ளி மணவாளப் பெருமாளே

ராகம்: பந்துவராளி தாளம்: ஆதி

வள்ளி மணவாளப் பெருமாளே
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு (வ)

கொங்கை குறமங்கையின் சந்தமணமுண்டிடும்
கும்பமுநி கும்பிடும் தம்பிரானே (வ)

வேலெடுத்து நடந்த திவாகராசல
வேடுவப் பெண்மணந்த புயாசலா (வ)

குமரா முருகா சடிலத்தன் குருநாதா
குறமா மகளாசை தணிக்கு திருமார்பா (வ)

குணதர வித்தக குமர புனத்திடை
குறமகளைப் புணர் மணி மார்பா (வ)

தேனெழு புனத்தில் மான்விழிக் குறத்தி
சேரமருவுற்ற திறள் தோளா (வ)

அருணை விலங்கல் மகிழ்குற மங்கை
அமளிநலங் கொள் பெருமாளே (வ)

கண்கயற் பாவை குறமங்கை பொற்றோடமுவு
கஞ்சுகப் பான்மைபுனை பொன்செய் தோளாய் (வ)

பூம்பொழில் மேவிவளர் பெருமாளே

பூம்பொழில் மேவிவளர் பெருமாளே
பூங்குறமாதுடன் ஆங்குற வாடியருள் (பூ)
அன்னை விரும்பிய குறமானை
அண்மி விரும்பிய பெருமாளே (பூ)
பூம்பாளை யெங்கு மணங்கமழ்
தேங்காவில் நின்றதோர் குன்றவர்
பூந்தோகை கொங்கை விரும்பிய பெருமாளே (பூ)
மலைகொண்ட வேடுவர் கானூடே போய்
குறமங்கையாளுடனே மாலாயே
மயல்கொண்டு வாயவள் தாள்மீதே வீழ்குமரேசா(பூ)
ஆசைப்பட்டேனல் காவல் செய்
வேடிச்சிக்காக மாமயல்
ஆகிப் பொற்பாதமே பணிகந்த வேளே (பூ)

உபசாரம்

தங்கக் கிண்ணந்தனிலே—வாசனைத்
திரவியம் பல சேர்த்து
செங்கமலப் பூவைத் தோய்த்து நாம்
சண்முகன் மேல் தெளிப்போம்
அத்தருடன் பன்னீர் சந்தனம்
அழகுறத்தான் கலந்தே
முத்துக்குமரனுடன் வள்ளிமேல்
மெல்ல மெல்லத் தெளிப்போம்
மங்கல நன்னுளிதில் குறக்குல
மங்கை மணவாளன் மேல்
மங்கலத் திரவியங்கள் தெளித்துநாம்
மகிழ்ந்து கொண்டாடுவோம்
வேல்கொண்டு சூரர்குலம் தனையே
வேருடன் தான் களைந்தான்
வேல்விழி வள்ளிக்கரம் கொண்டகுஹன்
வேண்டு வரம் தருவான்

சிக்கலில் அன்னையிடம் வேல்வாங்கும்
சிங்கார வேலனவன்
அக்கறையுடன் வந்தே உலகம்
அனைத்தையும் காத்திடுவான்

மலர் மாரி தூவிடுவோம்

மலர் மாரி தூவிடு வோம் மணமக்கள் மீது நாம்
மங்கல நன்னாளிதில் மணமல்லிகை ஜாதி (மலர்)

மலர்கள் புதிதாய்க் கொய்தே
மணங்கூட்டும் பொருள்சேர்த்தே
மங்கை வள்ளிநாயகன்—பச்சை
மாமயிலோன் புகழ்பாடி (மலர்)

கடம்புடன் தொடைமாலை சேர்த்து
கோடி கோடி மலர்கள் குவித்து
திடமிகும் ஈராறு தோளன்
தேவகுஞ்சரி பாகன்மீது (மலர்)

கந்தன் அழகு

கந்தன் அழகை என்ன சொல்லுவேன்—நம்
பந்தந் தொலைக்கவந்த பன்னிருகை கோலப்பன் (க)
ஆறுபடைவீடு கொண்டவன்—வள்ளியை
ஆட்கொள்ள மணமகனாய் வந்தவன்—திரு
மாலவன்மருகன் சிக்கல்வேலவன் சிங்காரமயில்
வாகனன் வாமதேயனின் சேயவன் வள்ளிமணாளன்
(கந்தன்)

அவுணர் குலத்தைப் பொடியாக்கினான்—அந்த
அமரர் துயரனைத்தும் நீக்கினான் பதம்
நாடிடுமெவர்க்கும் புகழ் பாடிடுமெவர்க்கும் அருள்
தேடிடுமெவர்க்கும் மயிலாடிடும் குஹன் அருள்வான்
(கந்தன்)

திருக்கல்யாணக் கோலம்

கல்யாண சுந்தஸு⁻ம ஸோபித கந்தராய
மல்யாதி ஸு⁻மபூஜித பதபங்கஜாய
ஹல்யாதி கோஷரஹிதாமர புத்ரிகாய
கல்யாண வல்லிரமணாய நமோ நமஸ்தே

வேடுவர் புனத்திலுரு மாறி முனிசொற்படி
வியாகுல மனத்தினெடு போம் விற்காரனும்.
மேவிய புனத்தி தனிலோ வியமெனத் திகழு
மேதகு குறத்திதிரு வேளைக்காரனே

பாடல்★

ராகம்: காம்போதி தாளம்: ஆதி

பல்லவி

ஆறுமுகன் வள்ளிமணக் கோலம் ஆனந்தம்
திருமணக் கோலம் ஆனந்தம் (ஆ)

அநுபல்லவி

ஏறுமயிலேறிவரும் தேவகுஞ்சரி நாயகன்
ஏனல் காத்தகுறமகளாம் எங்கள் வள்ளியையு
மணந்தான் (ஆ)

சரணம்

தென்பரங் குன்றந்தனிலும் தேவர்புகழ் செந்தூரிலும்
தென்பழநி ஸ்வாமிமலை மீதும மர்ந்தான்
தெய்வத் திருமலைகளாடி சோலைமலை வாசனுனன்
தேவஸேனா பதியான திருநுதல் உதித்தகந்தன் (ஆ)
அன்று மாம்பழத்துக்காக அத்தனுடன் சண்டையிட்டு
ஆண்டிவேடம் தாங்கிப் பழநியாண்டவனுனன்
குன்றம்நிகர் தோளன்இன்று குறக்கொடியாள்
கைபிடித்து
கூறுமடியார் மகிழ வள்ளிமணவாளன் ஆனான்
இந்திராதி தேவருடன் யட்ச கின்னரருங்கூட
ஈசன் உமைமாலுடன் கணேசருடனே
வந்து மகிழ்வுடன் அந்தவள்ளி மணக்காட்சிகண்டு
வாழ்த்திநிற்கும் கோலாஹல வைபவத்தை என்ன
சொல்வேன் (ஆ)
பச்சைமயிலேறி இந்தப்பார் முழுதும் சுற்றியவன்
பக்தர்களைக் காக்கவென்றால் பறந்து வருவான்
நிச்சயமிதை யுணர்ந்து நெஞ்சிலவனை நிறுத்தின்வப்
போம்
நித்தம் குருதாஸன் தொழும் நீலமயில் வாகனனும் (ஆ)

நாமாவளி

குறவர் மாதினைமணந்த குமரவேளே
குமரக்கோட்டந் தனிலமர்ந்த கந்தவேளே

திணைப்புனமேவு குறக்கொடி யோடும்
திருத்தணி மேவும் பெருமாளே!

(மஹா நிவேதனம்)

மங்களம் பொங்குக எங்கும்

(அபங்க மெட்டு)

திருக் கல்யாண மண்டபத்தில்
அன்னை வள்ளி அருகினில் இருக்க
முத்துக் குமரன் திருமணக் கோலம்
மன மகிழும் காட்சி கண்டோம்

விண்ணின் தேவர் கண்டு மகிழ்ந்தார்
வேதம் வல்லார் வாழ்த்தித் துதித்தார்
மண்ணின் மாந்தர் மனமும் களித்தார்
மன்னன் நம்பி உள்ளங் குளிர்ந்தான்

முது மங்கையர் ஆரத்தி சுற்றி
நல்ல மங்கள கீதம் இசைத்தார்
நங்கை வள்ளி திருமணம் கண்டோம்
நாமும் கொள்ளை ஆனந்தம் கொண்டோம்

குஹன் திருமண வைபவம் பாட
குரு தாசன் புண்ணியம் செய்தான்
வள்ளி முருகன் அருளால் இங்கு
நித்ய மங்களம் பொங்குக எங்கும்!

பிரார்த்தனை கீதங்கள்

(அபங்க மெட்டு)

முருகா என்னும் முழக்கம்

முருகா முருகா என்னும் முழக்கம்—விண்ணை
முட்ட வேண்டும் அந்த முழக்கம்—திரு
முருக னடியார்கள் கோடி—மன
முருகிச் சொல்லுவோம் கூடி—(ஆறுபடை) (முருகா)

வீடமர்ந்த பெருமான் (அன்பர்) மன
விடுதேடியே வருவான் பொல்லா
அரக்கர் கூட்டமதை வென்றான்—மின்னும்
அழகுவே லனாய் நின்றான்—குற (முருகா)

மாதுவள்ளி மணவாளன்—பச்சை
மயிலிலேறு மருளாளன்—குரு

தாசன் போற்றும் வடிவேலன்—எங்கள்
தாய் உமை மகிழும் பாலன்—வேல்வேல் (முருகா)

முருகையா

எதற்கும் உதவாதவன் நான் முருகையா
சித்த உறுதியற்றவன் முருகையா
செய்யும் பாபம் கணக்கில்லை முருகையா
பாபம் தீர வழியுண்டோ முருகையா
மலர்த் தாளில் விழுந்தேன் முருகையா
அருள் தரவே வரவேணும் முருகையா
வள்ளி மணவாளனுன முருகையா
உன்னை மறவாமதியருள்வாய் முருகையா
பச்சை மயிலேறி வாராய் முருகையா
பாரில் மங்களம் பொழிவாய் முருகையா
குரு தாசன் பணியும் முருகையா
முத்துக் குமரா ஷண்முகா முருகையா

அருள்வாயே !

ராகம்: சுபபந்துவராளி தாளம்: ஆதி(திஸ்ர நடை)

செகத்திற் சோதிப் பெருமாளே
சிறக்கப் பாலித் தருள்வாயே
பலகாலுமுனைத் தொழுவோர்கள் மறவாமல்
திருப்புகழ்கூறிப்
படிமீது துதித்துடன்வாழ அருள்வேளே!
பலதுன்பமுழன்று கலங்கிய சிறியன்புலையன் கொலையன்புரி
பவமின்று கழிந்திட வந்தருள் புரிவாயே!
இரவிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்
இருபதமும் அறுமுகமும் யானோத அருள்வாயே!
செறியுமிரு வினைகரண மருவு புலனொழியவுயர்
திருவடியி லணுகவர மருள் வாயே!
அகில புவனதியெங்கும் வெளிபுற மெய்ஞ்ஞானஇன்ப
அமுதையொழி யாதருந்த அருள் வாயே!
உணக்கையிடு படுபாவி எனக்குனது கழல்பாட
உயர்ச்சி பெறு குணசிலம் அருள் வாயே!

ஆரத்தி

அரனுமை மகிழ்பால ஆறுமுக வடிவேல
அறுபடை வீடமரு அழகுவேல—உன்

திருநாமம் சொல்வோர்க்குத் தேடிவந் தருள்புரிவாய்
தேவகுஞ்சரி வள்ளி மணவாளனே

ஜய மங்களம் நித்ய சுபமங்களம்

மங்களம் ஸ்கந்தாய மஹநீய கீர்த்தயே
மங்களம் க்ருத்திகா ஸூத்குஹாய
மங்களம் தேவஸேனா வல்லிரமணய
மங்களம் குருதாஸ ரக்ஷகாய

ஜய மங்களம் நித்ய சுபமங்களம்

கோலாட்டம்

திங்களரவு நதி துன்று சடிலரருள்
செந்தின கரிலுறை பெருமாளே

தகையா தெனக்கு னடிகா ண வைத்த
தனியே ரகத்தின் முருகோனே

தவமலரு நீல மலர் சுனையநாதி
தணிமலை யுலாவு பெருமாளே

செழுமா மதில்சேர் அழகார் பொழில்சூழ்
திருவீழியில் வாழ் பெருமாளே

திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு பெருமாளே

மாமுநிவன் புணர் மானுத வுந்தனி
மானை மணஞ் செய்த பெருமாளே

நாமாவளி

கந்தா முருகா கருணாகரனே
மந்தாகினி தந்த வரோதயனே

கும்மி

கனகமிகும்பதி மதுரைவளம்பதி யதனில்வளர்ந்தருள்
பெருமாளே!
அசலநெடுங் கொடி அமையுமைதன்சுத குறமகளிங்கித
மணவாளா!
மலரயனைநீடு சிறைசெய்தவன்வேலை வளமேபெறச்செய்
முருகோனே!
கடலொலியதான மறைதமிழ்களோது கதலிவனமேவு
பெருமாளே!
ஆடுமயிலினி லேறியமரர்கள் சூழவரவருமிளையோனே!

காலனென்னையணுகாமலுனதிரு காலில் வழிபட
அருள்வாயே!
பச்சைமயில்கொண்டு பச்சைமறமங்கை பச்சைமலை
யெங்கு முறைறவோனே!
எத்தனையுநெஞ்சில் எத்தனமுயங்கி இத்தனையிலஞ்சலென
வேணும்!
தாவுசூர் அஞ்சிமுன் சாயவேகம்பெறுந் தாரைவேல்
உந்திடும் பெருமாளே!
தூயதாள்தண்டையுங்காண ஆர்வஞ்செயுந்தோகைமேல்
கொண்டு முன்வரவேணும்!
திருமுகசந்த்ர முருககடம்ப சிவசுதகந்த குகவேல!
சிவசிவஎன்று தெளிவுறுநெஞ்சு திகழநடஞ்செய்
கழல்தாராய்!

நாமாவளி

வேல்முருகா வடிவேல்முருகா வடிவேல்முருகா
வடிவேல்முருகா
மால்மருகா திருமால்மருகா திருமால்மருகா
திருமால்மருகா

★

கல்யாண நலங்கு

1

கௌரீ கல்யாண வைபவமே
வல்லி கல்யாண வைபவமே
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயிலேறிய வானவனே
அறிவாகமும் பெருக இடரானதும் தொலைய
அருள் ஞான இன்பமது புரிவாயே
பிறவிகள்தோறும் எனை நலியாத
படியுனதாள்கள் அருள்வாயே
முருகவிழ் தாரும் சூட்டி ஒரு தனிவேழம் கூட்டி
முதல் மறமானின் சேர்க்கை மயல் கூர்வாய்
பேதையேன் மிசை விழியருள் வைத்துக்
குன்றாத வாழ்வையும் அருள்வாயே
இருநில மீதில் எளியனும் வாழ
எனது முன்னோடி வரவேணும்
கருணை பொழிந்து முகமுமலர்ந்து
கடுகி நடங் கொடருள்வாயே

நலங்கு

(மஞ்சள் பூசுதல்)

நலங்கிட வாரும் என் நாதா ஸ்வாமிநாதா
சலங்கை கொஞ்சும் தாள்களைச் சற்றே தரவேணும்
தினைகாத்து நின்ற எனைத் திருமணமும் கொண்டீர்
எனைக் காத்து அருள்வீரே ஏரகத்தரசே!

(சந்தனம்-குங்குமம்)

அரக்கர் குலமழிய ஒரு அயிலெறிந்த வேலா - உன்
திருக்கரத்தில் சந்தனம் பூசி மகிழ்ந்திடுவேன்
திருமாலின் மருகா உயர் திண்தோள் எழிலுடையாய்
திருமார்பில் சந்தனம் பூசியே மகிழ்வேன்

(திலகம்)

நெற்றிக்கண்ணில் உதித்திட்ட நீலமயில் வீரா - உம்
நெற்றியிலே செஞ்சாந்துத் திலகம் நான் வைப்பேன்

(பசுமஞ்சள்)

வண்ணமயிலேறும் வடிவேலா உமை பாலா - உம்
கன்னங்களில் மஞ்சள் என் கையால் தீற்றிடுவேன்

(புஷ்பமாலை)

புவியெங்கும் மணம் வீசும் உன் புகழும் வீரமும்போல்
புஷ்பங்கள் மணக்க மாலை புனைந்து சாற்றிடுவேன்
தவா உன் கருணை போல் திசையெங்கும் மணக்கும்
பூவால் பூசனை செய்து போற்றி வழிபடுவேன்

(கண்ணாடி)

அஞ்சு முகத்தோன்றில் அங்கு ஆறுமுகங்காட்டி
செஞ்சமரை மாயு மாயக்காரக் கந்தவேளே!
அழகன் என்றே பெயர் கொண்ட முருகா முத்துக்குமரா உன்
அழகை இந்தக் கண்ணாடியில் கண்டுமகிழ்ந்திடுவீர்
புள்ளிமயில் வீரா அடியார் போற்றும் உமைபாலா - என்
உள்ளத்தைத் தெளிவாக்கி உனைக்காண அருள்வீர்

(பாதங்களில் நலங்கு)

அன்பின் இனிய நாதச் சிலம்பு புலம்பிடும் அருண
ஆடகக் கிண்கிணி தங்கிய அடிகள்
அதிசயம் அநேகமுற்ற பழநிமலையழகா

அருண தளபாத பத்மம் அதுவே நிதமருள்வாய்
மூவடி கேட்டு வந்த முரஹரன் மருகா-தன்
சேவடி எடுத்தாடும் சங்கரன் குமரா
செந்தூரப் பொடிசேர்த்த செம்பஞ்சுக் குழம்பை-திருச்
செந்தூரக் குமரேசா உன் சிற்றடியில் இடுவேன்

(உப்பு - பருப்பு)

உப்புநான் தருவேன் வேலா பருப்பு நீர் தாரும்
உம் திருஷ்டி கழிய நான் சுற்றிப்போடுகிறேன்

(அப்பளம்)

ஒப்பில்லா அழகனே ஓராறு முகனே
அப்பளம் தட்டி இன்று ஆனந்தம் காண்பேன்
அப்பளம் போலென் பாபமனைத்தும் பொடியாக்கி
பொற்பாதம் சேர்ப்பாய் வேதப்பொருளே ஷண்முகனே!

(நமஸ்காரம்)

குருதாஸன் போற்றிப் பணியும் குமரா முருகையா
இரு தாளும் பணியுமென்னை எந்நாளும் காப்பாய்
மறையின் முதனடு முடிவின் மண நாறு சீரடியில்
மங்கை நமஸ்கரித்தேன் திரு மாலொனின் மருகா

பத்யம்

(வள்ளி சொல்வது)

வற்றாத பொய்கை வளநாடு கண்டு மலைமேலிருந்த குமரா
உற்றார் எனக்கு ஒரு பேருமில்லை உமையாள் தனக்கு மகனே
முத்தாடை தந்துஅடியேனையாளும் முருகேச!எந்தனரசே
வித்தாரமாக மயில் மீதிலேறி வரவேணுமென்றனருளே
இருவினை மும்மலமும அற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறும் வகை பரம சுகமதனையருள் இடைமருதில்
ஏக நாயகா லோகநாயகா இமையவர் பெருமாளே
வாழு மயில் மீது வந்து தாளிணைகள் தாழுமென்றன்
மாயவினை தீர அன்பு புரிவாயே
இமகிரி குமாரத்தி அநுபவை பராசத்தி
யெழுதரிய காயத்ரி யுமையாள் குமாரனே
அம்புவிதனக்குள் வளர் செந்தமிழ் வழுத்தியுனை
அன்பொடு துதிக்கமன மருள்வாயே

(முடுகு)

எந்தாயு மெனக்கருள் தந்தையுநீ
சிந்தா குலமானவை தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறை நாயகனே

பத்யம்

(முருகன் சொல்வது)

ஆடிய மயிலினை ஒப்புற்று பீலியும் இலையும் உடுத்திட்டு
ஆரினும் அழகு மிகப் பெற்று - யவளுளும்
ஆகிய இதன்மிசை உற்றிட்டு மானின மருள விழித்திட்டு
ஆயுத கவண் ஒரு கைச் சுற்றி விளையாடும்
வேடுவர் சிறுமியானவளே!

பெரும்பைப் புனத்திலுள் சிற்றேனல் காத்த
பேதையே மானின்ற மங்கை நீயே
வேலையன்பு கூர வந்த ஏக தந்த யானை கண்டு
வேகமுடன் ஓடியஞ்சு மானு நீயே

தேனுடன் தினைமாவும் தெவிட்டாத அன்புமாய்த்
தந்து உபசரித்த தையல் நீயே
ஏடாற்குழற் சுருபி ஞானுதனத்தி மிகு
மேராள் குறத்தியென வந்தவள் நீயே

(முடுகு)

கத்திய தத்தைக் களைத்து விழத் திரி
கற் கவண் விட்டெறி குறமாதே
சிறுத்த இடை வெளுத்த நகை கறுத்த குழல்
சிவத்தவிதழ் மறச் சிறுமியே! உனை மறவேன்!

(கற்பூர தாம்பூலம்)

கற்பூர தாம்பூலம் தனைக் கந்தா உமக்களித்தேன்
கருணையுடன் காப்பாய் கதிர்காமா வடிவேலா

(நமஸ்காரம்)

குகனே உமை மகனே சண்முகனே கங்கைமகனே—எழில்
முகனே வித்தகனே உனக்குக் கோடி நமஸ்காரம்

மலர்ச் செண்டு

ராகம் : சாமா பல்லவி தாளம் : ஆதி

ஆடும் அழகைக் காணீர்—மணமலர்ச்செண்டு
ஆடும் அழகைக் காணீர்

அநுபல்லவி

ஆடு மயில் வீரன் அன்னை வள்ளியுடன்
அலங்கார மண்டபத்தில் அமர்ந்து உல்லாசமாக (ஆ)

சரணம்

குன்று தோருடியவன்-கொடும் அசுரர்
குலம்தனைச் சாடியவன்
குன்றம் நிகர் தோளன் குவலய விழியாளன்
குறத்தி மனமகிழ குருதாஸனும் பணிய (ஆ)

ஊஞ்சல் லாலி

வேதமிரண்டிரண்டும் நாற்கால்களாக
ஒதுமுபநிடதம் நாற்கயிர்களாக
நாதம் நிறை ஓங்கார மஞ்சமீது - ஸ்வாமி
நாதனவன் வள்ளியுடன் ஆடு மூஞ்சல்

வேதா மைத்துனவேளே வீரா சற்குண சீலா
ஆதாரத் தொளியானே ஆரூரிற் பெருமாளே-லாலி

பாரோர்க்கிறைசேயே பாலக்கிரிராசே
பேராற் பெரியோனே பேரூர்ப் பெருமாளே

நிதியே நித்யமே என் நினைவே நற்பொருளாயோய்
கதியே சொற்பரவேளே கருவூரிற் பெருமாளே-லாலி

வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் தொலை சீலா
கற்றுற்றுணர் போதா கச்சிப் பெருமாளே-லாலி

மாலயனுக்கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளோனே நாககிரிப் பெருமாளே-லாலி

ஓடம்

சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவி மீதிலும் பகர் செய் குருநாத - முருகா
மா மாது வ... மாது கார் மாவு சிலை மாது
மாலாகி விளையாடு புயவீர - முருகா

துள்ளி விளையாடு புள்ளியுழை நாண
வெள்ளி வன மீதுற்றுறைவோனே - முருகா
வையமுழுதாளும் ஐய மயில் வீரா
வல்ல முருகா முத்தமிழ் வேளே - முருகா
வித்தகா ஞான சத்தினி பாதா - முருகா
வெற்றி வேலாயுதப் பெருமாளே - முருகா
அமுதா சனத்தி குற மடவாள் கரிப்பெணொடு
அருணசலத்திலுறை பெருமாளே - முருகா
யாதுநிலையற்றலையு மேழு பிறவிக் கடலை
யேறவிடு நற்கருணை யோடக்காரா
ஆணவ வழுக்கடையு மாவியை விளக்கியநு
-பூதியடைவித்த தொரு பார்வைக்கார
ஏலேலோ - ஏலேலோ

அடியார் வணக்கம்

ராகம் : சுருட்டி/சௌராஷ்டிரம் தாளம் : ஆதி

ஆறுமுகனைப் பணியும் அடியாரனைவர்க்கும்
ஆயிரமாயிரம் நமஸ்காரம்
வீரபாகு முதலாம் நவ வீரர்கள் தமக்கும்
வேலவன் துணைவனும் வீரன் இடும்பனுக்கும் (அ)
குறுமுனிவன் முதலாய் நக்கீரன் அருணகிரி
குமரகுருபரனும் பாம்பன் அடிகள் போன்று (அ)
தெள்ளு தமிழ்த்திருப்புகழ் திசையெங்கும் பரப்பிய
வள்ளிமலை ஸ்வாமிகள் வழித் தோன்றல்களான (அ)
அண்ணல் ரகுராமனுக்கு அயராது சேவை செய்த
அநுமனைப் போன்ற பெரு மடியவரனைவர்க்கும் (அ)
நாளும் குரு தாசனை நயந்தே ஆட்கொண்ட
நற்கவிவாணர்க்கும் நல்லோர்கள் தமக்கும் (அ)

மங்களம்

ஜயானந்த பூமன் ஜயா பாரதாமன்
ஜயாமோஹ கீர்த்தே ஜயானந்த மூர்த்தே
ஜயானந்தஸிந்தோ ஜயாஶேஷ பந்தோ
ஜயாத்வம்ஸதா முக்தி தானேஶஸூநோ
குன்று தோறுடிவரு கந்தனே ஷண்முகனே
குமரனே பழநி வளர் கோலாஹலா

என்றென்றும் கருணையுடன் இவ்வுலகைக் காத்திடுவாய்
ஈசனுமை மகிழ்ஸ்வாமிநாத குகனே

ஜய மங்களம்—நித்யஸுபமங்களம்

★

பக்தா பீஷ்டப்ரதாயாஸ்து பவரோக விநாஸிநே
பவாநீ ப்ரிய புத்ராய ரணதீராய மங்களம்
வல்லீவதநராஜீவ மதுபாய மஹாத்மநே
ஸிகிவர்யஸுரங்காய ஸுப்ரமண்யாய மங்களம்

★

தென்பரங்குன்றிற் பெருமானே போற்றி
கயிலைமலை நிகர் செந்திற் பதிவாழ்வே போற்றி
பழநிவரு கற்பூர கோலாஹல போற்றி
பொன்னேரகப் பதியில் வளர் குமரா போற்றி

குன்றுதோறாடு மென்வேலவனே போற்றி
சோலைமலை மிசைமேவு பெருமாளே போற்றி
குறமாது தனைமருவு குருபரனே போற்றி
குருதாஸன் பணி வள்ளி மணவாள போற்றி!

ஆறிரு தடந் தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்குவாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்!

வாழ்க அந்தணர் வானவரானினம்!
வீழ்க தண்புனல்! வேந்தனுமோங்குக!
ஆழ்க தீயதெலாம்! அரன் நாமமே
சூழ்க! வையகமும் துயர் தீர்கவே!

முடியாப் பிறவிக் கடலில் புகார்; முழுதும் கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்படார் வெற்றிவேல் பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர்குல மடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திரு நாமம் புகல்பவரே!

ஜெய்வல்லீ தேவஸேநா காந்தஸ்மரணம்
ஜெய் ஜெய் ஸுப்ரமண்ய ஓம்

★

டோலோத்ஸவம்

(பிரார்த்தனே)

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருள்வாய்
தூவிக்குலமயில் வாகனனே! துணேயேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம்பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே!
கதி தனேயொன்றையும் காண்கின்றிலேன் கந்தவேல்
முருகா!
நதிதனேயன்ன பொய் வாழ்வில் அன்பாய்நிரம்பால்
பொதிந்த
பொதிதனேயும் கொண்டு திண்டாடுமாறெனேப் போத
விட்ட
விதிதனே நொந்து நொந்து இங்கேயென்மனம்
வேகின்றதே
ஆவிக்கு மோசம் வருமாறு அறிந்துன்னருட் பதங்கள்
சேவிக்க என்று நினேக்கின்றிலேன் வினே தீர்த்தருளாய்!
வாவித் தடவயல் சூழ் திருத்தணி மாமலே வாழ்
சேவற் கொடியுடையோனே! அமர சிகாமணியே!

அழைப்பு

தண்டரள மணிமார்ப செம்பொனெழில் செறிருப
தண்டமிழின் மிகு நேய முருகேசா
குலவுதோகை மீதாறு முகமும் வேலும் ஈராறு
குவளே வாகும் நேர்காண வருவாயே!
மெச்சிக் குறத்தி தனமிச்சித் தணேத்துருகி
மிக்குப் பணேத்த மணிமார்பா!
எத்திக்குமுற்ற புகழ் வெற்றித் திருத்தணியில்
இற்றைத் தினத்தில் வரவேணும்!
தெவயானே அங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல் வீர மிஞ்சு கதிர் வடிவேலா!
அவமாயை கொண்டுலகில் விருதாவலேந்துழலும்
அடியேனே அஞ்சலென வரவேணும்!

பால் நிவேதனம்

பாலே ஏற்று மகிழ்ந்திடுவீர்
பால சுப்ரமண்ய தேவா, (பாலே)

பாலும் தேனும் பன்னீரும் பஞ்சாமிர்தமும் இளநீரும்
பரவசமாய் ஏற்றுக்கொள்ளும் தணிகைமலை மேவு
முருகா (பாலை)
தேனும் தினைமாவுமந்த தினைப்புனந்தனிலுண்டு
மகிழ்ந்தாய்
கானவள்ளி நாயகனே கற்கண்டுடன் சீனி சேர்த்த (பாலை)

தாம்பூலம்

தாம்பூலம் தரிப்பீர்—முருகா
தணிகாசல பதியே (தா)

ஆம்பல் மலர்சூழும் சரவணப்பொய்கையில்
அவதரித்த குமரா அன்புடன் நானளிக்கும் (தா)

அந்தரி அன்னையிடம் அமுதுதனை யுண்டாய்
அறுவர் மடியினிலே தவழ்ந்து முலையுண்டாய்

தந்தைக்கு உபதேசம் தான் செய்த சிவகுருவே
திருவாய் மணக்கவே திரவியம் பல சேர்த்த (தா)

(லாலி)

ஆனமொழியே பகர்ந்து மலைமேவு கந்த
ஆதிமுதலாக வந்த பெருமாளே
தினைவேடர் காவல்தங்கு மலை காடெலாமுழன்று
சிறுபேதை கால்பணிந்த குமரேசா
வீரப்ரதாப பஞ்ச பாணத்திளுல் மயங்கி
வேடிச்சி காலிலன்று விழுவோனே
திருமால் அளித்தருளும் ஒரு ஞானபத்தினியை
திகழ்மார்புறத்தழுவு மயில் வேலா.

(கௌரி கல்யாணம்)

கௌரீ கல்யாண வைபோகமே
வல்லீ கல்யாண வைபோகமே
அறிவாலறிந்துன் இருதாளிறைஞ்சும்
அடியாரிடைஞ்சல் களைவோனே
போகமதிலேயுழன்று பாழ்நர கெய்தாமலுன்
பூவடிகள் சேர அன்பு தருவாயே
கண்கயற்பாவை குறமங்கை பொற்றோடழுவு
கஞ்சுகப் பான்மை புனை பொன்செய்தோளாய்

குவலயம் யாவும் போற்ற பழநியில் ஆலங்காட்டில்
குறமகள் பாதம் போற்று பெருமாளே

(நலங்கு)

["நகுமோமு கலவாணி" மெட்டு]

வாணுடு புகழ்நாடு தேனுறு புடைசூழ
மாயூர கிரிமேவு பெருமாளே சரணம்
வாழுமயில் மீதுவந்து தாளிணைகள் தாழுமென்றன்
மாயவினைகள் தீர அன்பு புரிவாயே—முருகா

["நாபாலி ஸ்ரீராம" மெட்டு]

விடு தவியான வெற்றி வேல் கரமதேயெடுத்து
வீறுமயில் மீதிலுற்று வருவாயே முருகையா
மாமாது வனமாது கார்மேவு சிலைமாது
மாலாகி விளையாடு புயவீரா சரணமையா
இடர்கலிகள் பிணியோட எனையுமருள் குறமாதின்
இணையிளநீர்முலை மார்பின் அணைமார்பா சரணமையா
புகழான பூமி மிசை மடிவாயிருதவகை
பொலிவான பாதமலர் அருள்வாயே—முருகையா!

(ஆரத்தி)

ராகம்: பந்துவராளி தாளம்: ரூபகம்

அருமறை தமிழ் நூலடைவே தெரிந்துரைக்கும்
புலவோனே
அரியரிபிரம்மாதியர் கால் விலங்கவிழ்க்கும் பெருமானே—
—சோபானே

நகைமுக விநோத ஞான குறமினுடனே குலாவு
நவமணியுலாவுமார்ப பெருமாளே! முருகா!—சோபானே
உரகபடமேல் வளர்ந்த பெரிய பெருமாள ரங்கர்
உலகளவுமால் மகிழ்ந்த மருகோனே முருகா!-சோபானே
அலங்கார முடிக்கிரணத் திரண்டாறு முகத்தழகிற்
கசைந்தாடு குழைக்கவசத் திரடோளா முருகா
—சோபானே

(ஊஞ்சல், பத்யம்)

பவனி வரவேயுகந்து மயிலின் மிசையே திகழ்ந்து
படிய திரவே நடந்த கழல்வீரா
பரம பதமாய செந்தில் முருகனெனவேயுகந்து
பழநிமலை மேலமர்ந்த பெருமாளே

குருந்திலேறும் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்குலாவும் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்தவேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையுமழகிய பெருமாளே

கோடாமலாரவார அலையெறி காவேரியாறுபாயு
வயலியல்
கோனாடு சூழ்விராலி மலையுறை பெருமாளே
விசையான தோகை துங்கமயிலேறி ஓடிவந்து
வெளிஞான வீடுதந்து அருள்வாயே.

(லாலி)

ராகம் : ஹரிகாம்போதி தாளம் : ஆதி

லாலிலாலி ஊஞ்சலாட்டிடுவோம்—வடி
வேலனே உன்புகழ் பாடிடுவோம்

மலைமேவு மாயக் குறமாதின்
மனமேவு வாலக் குமரேசா (லாலி)

தெள்ளு தமிழ்ப்பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே (லாலி)

வள்ளல் தொழுஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே (லாலி)

அடியவர்கள் நேசத் துறைவேலா
அறுமுக விநோதப் பெருமாளே (லாலி)

குறமகள் தனைமண மருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே. (லாலி)

★

தானத்தனத்த தனனவண்டு சுற்றிமது
தானுண் கடப்பமலரணி மார்பா!
தானங்குறித்து எமையாளுந் திருக்கயிலை
சாலுங் குறத்தி மகிழ் பெருமாளே!

அலைசூரன் வெற்புமரி முகனனை வத்திரனொ
டசுரார் இறக்க விடுமழல் வேலா!
அமுதாசனத்தி குறமடவாள் கரிப்பெணொடும்
அருணா சலத்திலுறை பெருமாளே!

இச்சையுணர்வின்றி யிச்சையென வந்த
இச்சிறுமி நொந்து மெலியாதே
எத்தனையு நெஞ்சில் எத்தன.முயங்கி
இத்தனையி லஞ்சலென வேணும்!

மலர் மஞ்சம் ★

ராகம் : ஆஹிரி தாளம் : ரூபகம்

ப. மலர்மஞ்ச மீதுவந்து மால்மருக எழுந்தருள்வாய்
அ.ப. நீலமயில் வாகனனே நீலகண்டன் மகிழ்மகனே (ம)

ச. மல்லிகை சம்பங்கிரோஜா முல்லை சாமந்தியுடன்
நல்ல மணங்கமழுமலர்கள் நன்கு தூவிவைத்த
இந்த (ம)

பாலுடன் பழங்களும் நான் பக்தியுடனுமக்
களித்தேன்
பழநிவளர் அழகாநீயும் ப்ரேமையுடன் ஏற்றருளி (ம)

பச்சைமயில் மீதிலேறிப் பார்முழுதும் சுற்றிவந்தாய்
பாதமலர் வருடிடுவேன் பரமேச்வரி தன்சுதனே (ம)

குமரனே உன்திருவடிகளை குருதாசன் துதித்தேன்
அமரருலகம் காத்தவனே அன்புடனே எமைக்
காப்பாய் (ம)

(ஜோஜோ)

ஜோஜோ வடிவேலா—குஹஷண்முக
ஜோஜோ வடிவேலா!

ஜோஜோ அறுமுகவேலா-குக-ஜோஜோ அசுரர்கள்காலா
ஜோஜோ பரங்கிரிதீரா-குக-ஜோஜோ பருமயில்வீரா
ஜோஜோ செந்தில்வேலா-குக-ஜோஜோ சங்கரிபாலா
ஜோஜோ பரதத்வபோதா-குக-ஜோஜோ ஸ்வாமிநாதா
ஜோஜோ குன்றமர்தேவா-குக-ஜோஜோ குமரனேவாவா
ஜோஜோ வள்ளிமணாளா-குக-ஜோஜோ பங்கயத்தாளா

பள்ளி கொள்ள வருவாய்

ராகம்: ஆஹிரி தாளம்: ஜம்பை

பரமேசன் உமைமகனே பள்ளிகொள்ள வருவாய் (பர)

பாற்கடலில் துயில்கொள்ளும் பரந்தாமன்
மருகோனே (பர)

நீதந்த உடல்இதனை நீவாழும் கோயிலாக்கி
நிர்மலமாம் உள்ளமதை நீதுயிலும் மஞ்சமாக்கி
வேலவனே உன்நினைவை வைத்தே னென்இதயத்தில்
வேண்டும் குருதாசனுக்கு வரமருள வரவேணும் (பர)

திரை போடுதல்★
(விருத்தம்)

மல்லிகைச் சரங்களாட மாவிலைத் தோரணமாட
சில்லெனத் தென்றல்வீசும் சிங்கார மண்டபத்தில்
மெல்லடிவைத்து நாணம் மிக்கதோர் நடையில் அங்கே
சொல்லிலே அடங்காமேனிச் சோதியள் வள்ளிவந்தாள்
வில்லெனப் புருவம்தீட்டி வெட்கமே கவசமாக
வல்லவேல் விழிகளிரண்டும் வாளெனச் சுழன்றுவீச
முல்லையின் சிரிப்பாம் அந்த மோகனஸ்திரமும் தாங்கி
வல்லவேல் முருகன் தன்னை வெல்லவே வந்தாள்வள்ளி

பள்ளியறைப் பாடல்★

வள்ளிப் பெண்ணே-வடிவேலன் உளம்புகுந்த
கள்ளப் பெண்ணே

குறமகளை ஆட்கொள்வாய் குமரனே தேவா
அறுமுகனைப் பதியாக அகத்தில் வைத்தே
அவனருளை வேண்டிநிதம் தவமிருந் தாய் (வள்ளி)

தினைப்புனத்தில் சோதனையில் வெற்றிகண்டாய்
திருமாலின் மருகனைநீ தேடிக் கொண்டாய் (வள்ளி)

தேனும் தினைமாவும் தந்து உபசரித்தாய்
திருமுருகன் உனை மணக்க நிச்சயித்தான் (வள்ளி)

வள்ளியுனைக் கைபிடித்துக் கூடிமகிழ
வண்ணமயில் வாகனனும் புண்ணியம் செய்தான் (வள்ளி)

குருதாசன் அனுதினமும் துதித்தேன் உன்னையே
குவலயத்தைக் காத்திடுவாய் வள்ளியன்னையே (வள்ளி)

நாமாவளி

குறவர்குல மகளே குமரனும் உனக்காய்க்
காத்திருப்பான் நீ செல் செல்—வழி
பார்த்திருப்பான் நீ செல் செல்.

ஊடல்★

வள்ளி : அந்தப் புரந்தனில் அநுமதியின்றி வந்த
அச்சமிலாக் கள்வன் யாரோ

முருகன் : கயிலையின் நாதன் கங்காதரன் மகன்
கந்தனுனைக் காண வந்தேன்

வள்ளி : பூதகணங்கள் உம்மைப்பின் தொடர்ந்துவந்தால்
பூவைநான் பயந்திடுவேனே!

முருகன்: அயனையும் குட்டி அசுரரை வாட்டிய
அயிலெடுத்தோன் இங்குவந்தேன்

வள்ளி : சிறுமி நான் செய்வது சிறுபிழையாயினும்
சீறி வருவீரோ ஐயா!

முருகன் : பழமது வேண்டிப் பார்முழுதும் சுற்றிய
பழநி வேலவன் நான் வள்ளி!

வள்ளி : ஒன்றுமில்லாமலே உமக்குக் கோபம்வந்து
ஓடிவிட்டால் என்ன செய்வேன்?

முருகன் : அடியவரைக் காத்து அனுக்ரஹம் செய்திடும்
அழகன்முருகன் வந்தேன் வள்ளி—உனை
ஆட்கொள்ளவே வந்தேன் வள்ளி

வள்ளி : குறமகள் என்னையுயர் குலமகளாய் ஏற்றுக்
கொண்டாய் வேல் முருகையா
பிறவிகள்தோறு முனைப் பிரியா வரமருள்வாய்
பீலிமயிலேறு முருகையா—குரு
தாசன் பணியு முருகையா.

பள்ளி கொள்ள வேண்டுதல்

(விருத்தம்)

திருப்பரங்கிரிதன்னில் திருக்கோயில் கொண்டவனே
தேவஸேநா பதியே தேவனே பள்ளிகொள்வாய்
அலைபொங்கு கடலருகே அழகிய செந்திற்பதியில்
அமர்ந்தவனே முருகையா அன்புடனே பள்ளிகொள்வாய்

தென்பழனி மாமலையில் தேடிவரும டியார்க்கு
திருவெல்லாம் அருள்வோனே தயவாய்நீ
பள்ளிகொள்வாய்

சங்கரற்கு குருவாக ஸ்வாமிமலை தனிலமர்ந்த
சண்முகக் குருமணியே சேவலனே பள்ளிகொள்வாய்

குன்றுகள் தோறுமாடிக் கோயிலெல்லாம் குடிகொண்ட
குமரனே உமைபாலா குஞ்சரியின் மணவாளா
சொக்கேசன் மகிழ்மகனே சோலைமலை யதன்மீது
சொகுசாய் அமர்ந்தவனே சுந்தரனே பள்ளிகொள்வாய்

மணமிக்க மலர்தூவி மஞ்சமிதை அமைத்திட்டேன்
கணபதியின் சோதரனே கண்ணுறங்க நீ வருவாய்!
குருதாஸன் பணிந்தேத்தும் குருபரனே ஆறுமுகா
இருதாளின் நிழலிலெமை எந்நாளும் வைத்தருள்வாய்!

திருப்புகழ் மாலை

இடர் கலிகள் பிணியோட எனையுமருள் குறமாதின்
இணையிள நீர்முலைமார்பினணை மார்பா துயில்கொள்வாய்
ஐயப்படாத ஐந்து பொய்யற்ற சோலை தங்கு
தெய்வத் தெய்வானை கொங்கை புணர்வோனே துயில்
கொள்வாய்

சுக குறமகள் மணாளன் என மறை பலவும் ஓதி
தொழமுது பழநி மேவு பெருமாளே பள்ளிகொள்வாய்

முருகவிழ் தாருஞ்சூட்டி ஒரு தனி வேழம் கூட்டி
முதல் மறமானின் சேர்க்கை மயல் கூர்வாய் வடிவேலா

கடகபுய மீதி ரத்த மணியணி பொன்மாலை கெச்சை
கமழுமணமார் கடப்பமணிவோனே துயில்கொள்வாய்

விதியான வளியையாளெனதுளமேவிய வளிநாயகி
வெகு மாலுற தனமேலணை முருகோனே துயில்
கொள்வாய்

வரியளிவுலாவுதுற்ற இருபுயமளாவி வெற்றி
மலரணையில் நீ யணைக்க வரவேணும் முருகா

(ஒரு நிமிஷம்—அமைதி)

(கோழிபோல் சப்தம் செய்யவும்)
(தெய்வத் தம்பதியர் துயிலெழுதல்)

★

திருப்பள்ளி யெழுச்சி

லஸத் ஸ்வர்ண கேஹே ந்ருணும் காமதோஹே
ஸும ஸ்தோம ஸஞ்சின்ன மாணிக்ய மஞ்சே
ஸமுத்யத் ஸஹஸ்ரார்க்க துல்யப்ரகாஸம்
ஸதா பாவயே கார்த்திகேயம் ஸுரேஸம்

உததியிடை கடவு மரகத வருண குலதுரக
உபவளித கனகரத சதகோடி சூரியர்கள்
உதயமென வதிகவித கலப கக மயிலின்மிசை
யுக முடிவினிருளகல ஒரு ஜோதி வீசுவதுவும்
வநசைமது பதியமலை விசயை திரிபுரை புநிதை
வநிதை யபிநவை யனகை யபிராம நாயகி தன்
மதலைமலை கிழவனநுபவ னபய னுபய சதுர்
மறையின் முதனடு முடிவின் மணநாறுசீரடியே!

திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம் பூடுருவப்
பொருவடி வேலும் கடம்பும் தடம்புய மாறிரண்டும்
மருவடிவான வதனங்களாறும் மலர்க்கண்களும்
குருவடிவாய் வந்தென் உள்ளம் குளிரக் குதிகொண்டவே!

காலையில் எழுந்துன் நாமமே மொழிந்து
காத லுமை மைந்த எனவோதிக்
காலமு முணர்ந்து ஞானவெளிக்கண் கள்
காண அருளொன்று பெறுவேனே

போதக மாமுக னேரான சோதர
நீறமணிவேணியர் நேயா ப்ரபாகர
பூமகளார் மருகேசா மகோததி யிகல்சூரா
போதக மாமறை ஞானதயாகர
தேனவிழ்நீப நறுவாறுமார்பக
பூரணமாமதி போலாறுமாகமுக முருகேசா!

போற்றி

குருபரன் பழநிக்குன் றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத் தடுத்தாட்கொள என்றன துள்ளம்
மேவியவடிவுறும் வேலவ போற்றி!

தேவர்கள் ஸேநாபதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்ய தேஹா போற்றி!
இடும்பாயுதனே! இடும்பா போற்றி!

கடம்பா போற்றி! கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர் கிரி கனகசபைக் கோரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்!

சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

[கந்தர் ஷஷ்டி கவசம்]

துயில் நீக்கி வர வேண்டல் ★

ராகம் : பூபாளம் தாளம் : ஜம்பை

பல்லவி

வெற்றி வடிவேலா வள்ளி மணவாளா
வெள்ளி முளைத்திட்ட நேரம்

அநுபல்லவி

சற்றே நீ துயில் நீக்கி சகத்தினைக் காத்தெங்கள்
சஞ்சலங்கள் தீர்க்கவருவாய்

சரணம்

நெற்றிக்கண்ணில் வந்த மாமயில்வீர
நின்னடியார்கள் போற்றி சொன்னோம்
என்றைக்கும் ஏழேழு பிறவிக்கும் உன்னையே
பற்றாகக் கொண்டனம் பழநியப்பா

மங்களம்

சிவசுப்ரமணியனே சிங்காரி வள்ளியின்
சிந்தையில் குடிகொண்ட செந்திலானே
நலமெலாம் பெற்றிந்த நானிலம் தழைத்தோங்க
நாளுமருள்வாய் ஸ்வாமிநாத குகனே!
ஜயமங்களம்-நித்ய-சுபமங்களம்

வாழ்த்து

பார்வாழி! குக்குடக் கொடிவாழி! பச்சைப்பசுந்தோகை
வாழி!
உனது பரிவார சனம் வாழி! நவ வீரரும் வாழி!
பரிவாக ஓங்கும் வடிவேல்
கூர்வாழி! வள்ளியம் கொடிவாழி! வளர்தெய்வகுஞ்சரி
மடந்தை
வாழி! கூறுபிள்ளைத் தமிழ்க்கவிவாழி! அரசர்
ஊர்வாழி! தானமொடு பரிகலம் வாழி! மறையோர்குலம்
மிகுந்து வாழி! உலகுபுகழ் மாயூர கிரிவாழி!
சந்நிதி உயர்ந்து மேன்மேலும் வாழி!
சீர்வாழி! எழில் பெருகு குமர குருபர முருகா!
ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம மர்ந்த பெருமாளே!

வள்ளி மணவாளன் மயிலேறும் வள்ளல்தனைத்
தெள்ளு தமிழாற் புனைந்து சீர்பெறவே உள்ளபடி
வைப்பாம் அருணகிரி வாழ்த்துந் திருப்புகழைக்
கற்பார் கரையேறுவார்!

முடியாப் பிறவிக் கடலில் புகார் முழுதும் கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்படார் வெற்றிவேல் பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர்குலமடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்பவரே!

நாமாவளி

அன்னை வள்ளி நாயகனே அறுமுகவேலா
அன்புடன் ஆதரிப்பாய் அரனுமை பாலா

நாம கோஷம்

வெற்றிவேல் முருகனுக்கு அரோஹரா!
வல்லீ தேவஸே நாகாந்த ஸ்மரணம்
ஜெய் ஜெய் ஸுப்ரமண்ய ஓம்
ஸித்தி விநாயக மூர்த்திகி ஜேய்

ஹர ஹர நம: பார்வதிபதயே—ஹரஹர மஹாதேவ
மஹா த்ரிபுரஸுந்தரிகி—ஜெய்
ஸத்குரு அருணகிரிநாத ஸ்வாமிகி—ஜெய்
ஸமஸ்த குஹபக்து லகு ஜெய்
ஸமஸ்த ஸத்குரு மஹராஜ்கி—ஜெய்

திருப்புகழ் நாமாவளிகள்

வள்ளல்தொழு ஞானக்கழலோனே
வள்ளி மணவாளப் பெருமாளே

அரஹர சுந்தர ஆறுமுகா
குறமகள் இங்கித மணவாளா

வேடர் மங்கை ஓடியஞ்ச அணைவோனே
மேருமங்கையாள வந்த பெருமாளே

வள்ளிக்கு வாய்த்த பெருமாளே
உள்ளத்தை நோக்க அருள்வாயே

கருநெல்லி மேனியரி மருகோனே
கனவள்ளி.யார்கணவ குமரேசா

அருள் அநுபோக குருபரனே உன்
அடியவர் வாழ அருள்வோனே

எழுதா மறை மாமுடிவே வடிவே
இணை நாகையில் வாழ் பெருமாளே

குறமகள் தனை மணமருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே

நீல நிறமால் தனக்கு மருகோனே
வீறுமயில் மீதிலுற்று வருவாயே

ஆனை முகற் கிளையோனே
ஆறுமுகப் பெருமாளே

அரிகேசவன்தன் மருகோனே
அலைவாயுகந்த பெருமாளே

வித்தகா ஞான சத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

அரனருள் சற் புதல்வோனே
அருணகிரிப் பெருமாளே

தனிமயிலேறும் பெருமாளே
தணிகையில் வாழ் செங்கதிர்வேலா

வல்லமுருகா முத்தமிழ் வேளே
வள்ளி மணவாளப் பெருமாளே

மயிலைப் பதி தனிலுறைவோனே
மகிமைக் கடியவர் பெருமாளே

மணமார் கடப்பமணிவோனே—கயிலை
மலைநாதர் பெற்ற முருகோனே

நீலமயில் ஏறிவந்த வடிவேலா
ஷதிமலை மீதுகந்த பெருமாளே

குறமகளைப் புணர் மணிமார்பா
உபயமலர்ப்பதம் அருள்வாயே

குன்றம்பிளந்த கதிர்வேலா
இன்றுன் பதங்கள் தரவேணும்

பச்சைமலை யெங்கும் உறைவோனே
கச்சியிலமர்ந்த பெருமாளே

வேதவனத்திற் சங்கரர் தந்தருள் பெருமாளே முருகா
ஏதமகற்றிச் செம்பத சிந்தனை தருவாயே முருகா

சரவணபவா முகுந்தன் மருகோனே
பழநிமலை வாழவந்த பெருமாளே

எழுகிரி ஆர்ப்பெழ வென்றவேலா
எழுகரை நாட்டவர் தம்பிரானே

குரங்குலாவும் குன்றுறை குறமகள் மணவாளா முருகா
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமாளே முருகா

★

பொது நாமாவளிகள்

குன்றெலாம மர்ந்த சிறு குமரனும் அவன்
குறக்கொடியை மணந்த பெரும் அழகனும் அவன்

திருத்தணிமலை தனிலமர்ந்தவனே
தினைப்புனவள்ளியை மணந்தவனே

புள்ளிமயில்வீர முருகா சரணம்
வள்ளி மணவாள குமரா சரணம்

ஆடிவருவாய்—முருகா—ஆடிவருவாய்
அன்னைவள்ளிதேவஸேனையோடு வருவாய்


சங்கரன் உமை மகிழ் பாலகனே
சரணம் சரணம் வள்ளி நாயகனே

பொங்கியெனும் வள்ளி நாயகனே—உன்
பொற்பதம் துணை மறை நாயகனே

வேடப் பெண்ணை விரும்பி மணந்த வேலவா குகா
அடிபணியும் அன்பர் தமை ஆளவா குகா

ஆறுமுக வடிவே அருள் குருநாதா
கழலிணை பெறவே யினி யருள்வாயே.

★



"குருதர்ஸன்"

டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி